REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
தினகரன்

2024 பெப்ரவரி 29 வியாழக்கிழமை
வரு. 92 இல. 52 | Thursday 29, February, 2024 | 28 பக்கங்கள் | 50/-







# இனவாதம், மதவாதத்தை புறக்கணித்து நல்லிணக்கத்தின் ஊடாக அபிவிருத்தி

## அரசாங்கத்தின் நோக்கம் இதுவென்கிறார் ஜனாதிபதி

### பொலிஸ் அதிகாரத்தை தவிர மற்றைய விடயங்களை வழங்குவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

### ஏனைய கட்சிகளுடனும் இதற்காக பேசி வருகிறோம்

நல்லிணக்கமூடாக அபிவிருத்தியை அடைய எதிர்பார்க்கும் அரசாங்கம் ஒன்றோடொன்று தொடர்புடைய மதவாதத்தையும், இனவாதத்தையும் ஓரம்கட்டவுள்ளதாக ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார். இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (28) நடைபெற்ற "நல்லிணக்கத்துக்கான மதங்கள்" தேசிய சர்வமத மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் உரையாற்றிய ஜனாதிபதி;

வரலாற்று ரீதியான மோதல்களுக்கு வழிவகுத்த இனவாதத்தையும், அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்தப்பட்ட மதவாதத்தையும் புறக்கணித்து நல்லிணக்கத்தின் ஊடாக அபிவிருத்தியை ஏற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

இனவாதம் மற்றும் மதவாதத்தை ஒதுக்கிய, உலகின் சகல நாடுகளும் விரைவான அபிவிருத்தியை அடைந்துள்ளன. இனவாதமும் மதவாதமும் அரசியல்வாதிகளுக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் மதத் தலை




வர்கள் தமது பதவிகளில் நீடிப்பதற்கும் குறுகிய வழியாக மாறியுள்ளது. இதை, சுட்டிக்காட்டிய ஜனாதிபதி நீண்ட கால கசப்பான அனுபவமானது நாட்டைப் பயங்கரமான போருக்கு இழுத்துச் சென்றது. நாட்டில் இன நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இதற்காக அரசாங்கம் பல சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முப்பது ஆண்டுகளாக இடம்பெற்ற "மோதல்களைத் தவிர்ப்பதற்கான பன்முக நடவடிக்கைகள்" திட்டத்தின் நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த சர்வமத மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வின் போது மாவட்ட பிரதிநிதிகள் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

மதத்துக்கும் நல்லிணக்கத்துக்குமுள்ள தொடர்பை நாங்கள் நன்கு அறிவோம். எங்களுக்கு இனவாதம் மற்றும் மதவாதம் பற்றிய அனுபவம் உள்ளது. இதன் விளைவாக, நாங்கள் ஒரு பயங்கரமான

06

## காஸா சிறுவர் நிதியத்துக்கு கார்கில்ஸ் அன்பளிப்பு



கார்கில்ஸ் நிறுவனத்தின் தலைவர் ரஞ்சித் பேஜ், "Children of Gaza Fund" நிதியத்துக்கு 30 இலட்சம் ரூபாவுக்கான அன்பளிப்புத் தொகையை நிதி அமைச்சில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார்.



## கிராம சேவகர்கள் நியமனம்

### 4232 பேருக்கு 13இல், நேர்முகப் பரீட்சை

07

# மின்சாரக் கட்டண திருத்தம்; 33 வீதமாவது குறைக்க வேண்டும்

## பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு பரிந்துரை

லோரன்ஸ் செல்வநாயகம்

மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், தற்போதைய மின் கட்டணத்தில் ஆகக் குறைந்தது 33 சத வீதம் குறைக்கப்பட வேண்டுமென பொருளாதார நெருக்கடி பாதிப்பை தணிக்கும் துறைசார் கண்காணிப்புக் குழு பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு பரிந்துரை செய்துள்ளது. மேற்படி குழு அண்மையில் பாராளுமன்ற கட்டடத்தில் கூடி கலந்துரையாடிய பின்னரே, இந்த பரிந்துரையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, மின் கட்டண அதிகரிப்பு காரணமாக

06

## இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை

# தமிழ்நாடு உத்தரவாதம் தந்தால் இணக்கப்பாட்டுடன் பேசத் தயார்

## அமைச்சர் அனிதாவுக்கு அமைச்சர் டக்ளஸ் பதில்



மாங்குளம் குறூப் நிருபர்

இழுவைமடி படகுகள் எமது கடல் எல்லைக்குள் வந்து கடல்வளங்களை சுரண்டுதல், அழித்தல் மற்றும் எமது கடற்றொழிலாளரின் வாழ்வாதாரத்தை சீரழிக்கின்ற செயற்பாடுகளிலும் ஈடுபடக்கூடாதென்ற

06



# தோட்டத்தொழிலாளர் சம்பள உயர்வு; நிர்ணய சபையுடன் நேற்று பேச்சு

## அமைச்சர் ஜீவன், தொழிலாளர் பிரதிநிதிகள் பங்கேற்பு

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பிலும், சம்பள நிர்ணய சபையில் அதற்கான கோரிக்கைகளை எவ்வாறு முன்வைக்கப்படல் வேண்டும் என்பது பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இப்பேச்சு

06



## இலங்கை தொடர்பான தீர்மானங்கள்

# ஆதாரங்கள் சேகரிக்கும் பொறிமுறை மீண்டும் நிராகரிக்கப்படுவதாக அறிவிப்பு

## UNHRC உரையில் அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்து



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் செயற்பாடுகள் வாக்கு வங்கி அரசியல் அல்லது குறுகிய அரசியல் நோக்கங்களுக்குள் உட்படக்கூடாதென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்

ஐ.நா மனித உரிமை பேரவைக்கான உரையிலே, அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை கடுமையான தடைகளை எதிர்நோக்குகின்ற போதிலும், மக்களுக்கு பயனளிக்ககூடிய ஆக்கபூர்வமான ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் வேலைத் திட்டங்களுடன் தொடர்ந்தும் தீவிரமாகவும் ஆக்கபூர்வமாகவும் ஈடுபட்டு

06

# அஸ்வெசும பயனாளிகள் ஜூன் முதல் 24 இலட்சமாவர்

## 02 ஆம் கட்ட விண்ணப்பம் கோரல் மார்ச் 15இல், நிறைவு

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்காக விண்ணப்பித்த பயனாளிகளின் தரவு சரிபார்ப்பு மற்றும் சான்றுப்படுத்தல் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், அஸ்வெசும பயனாளிகளின் குடும்ப அலகுகளின் எண்ணிக்கையை ஜூன் மாதம் முதல் 24 இலட்சமாக அதிகரிக்க சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் நிதி

06



## சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

# தோற்கடித்து அரசாங்கத்தின் பலத்தை நிரூபிக்க சந்தர்ப்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்

சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பது, அரசாங்கத்தின் பலத்தை காட்டுவதற்கு சந்தர்ப்பமாக அமையுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள இந்த

06



## ரொனி டி மெல் காலமானார்



நாட்டின் அரசியல் அரங்கில் புரட்சிகரப் பிரமுகரும், முன்னாள் நிதி அமைச்சரும், பிரபல பொருளாதார நிபுணருமான ரொனி டி மெல், கொழும்பில் தனியார் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (27) காலமானார். இறக்கும் போது அவருக்கு

06

# ஜனாதிபதித் தேர்தல்: செப்.18-அக்.18 காலப்பகுதிகளுக்குள் நடத்தப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் 18 மற்றும் அக்டோபர் 18 ஆம் திகதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நடத்தப்படுமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

06

# நாட்டின் கையிருப்பு 2.3 மில்.டொலராகிறது

லோரன்ஸ் செல்வநாயகம்




நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு கடந்த ஜனவரி மாதத்தில் நூற்றுக்கு 2.3 வீதத்தால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பரில் 4,392 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த கையிருப்பு, ஜனவரியில் 4, 491 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இக்கையிருப்பு, சொத்துக்களில்

06

# நாட்டில் கடும் வெப்ப நிலை அதிகளவு நீரை பருகுங்கள்

## கல்வி, சுகாதார அமைச்சுக்கள் விசேட அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் கடுமையான வெப்ப நிலை அடுத்த மாத நடுப் பகுதி வரை தொடரவுள்ளதால் பாடசாலைகளில், மாணவர்களின் வெளிப்புற செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறு கல்வி அமைச்சு அதிபர், ஆசிரியர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வெப்ப நிலை அடுத்த மாத

06



## STF அதிரடி சுற்றி வளைப்பில் தேடப்பட்ட நபர் சுட்டுக்கொலை

### சூரியவெவயில் துப்பாக்கிச் சூடு

03

## அசாதாரண நிலைமைகளால் தொழில்கள் வீழ்ச்சி

# பராட்டே சட்டம் இடைநிறுத்தம்; வர்த்தக சமூகத்தினர் பாராட்டு

தெஹிவளை, கல்கிஸ்ஸை விசேட நிருபர்

கொவிட்19 தொற்று, பொருளாதார வீழ்ச்சி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள், வங்கிகளில் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்யுமாறு ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவித்தனர். நீதியமைச்சில் நேற்று இவர்கள் நடத்திய

06



# தமிழரசு கட்சி மீதான வழக்கு: கட்சிக்காகவே தொடரப்பட்டது

## எவரும் பின்புலமாக இல்லை



"தமிழரசுக் கட்சிக்கு எதிரான வழக்கை கட்சிக்காகவே தாக்கல் செய்ததாகத் தெரிவித்த திருகோணமலை சாம்பல் தீவு வட்டார கிளையின் செயலாளர் சந்திரசேகரன் பரா, வேறு எவரதும் வேண்டுகோளின் பேரில், இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் மேலும் கருத்து

06

# இலங்கை வரவிருந்த சாந்தன் சென்னையில் நேற்று காலமானார்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு விடுதலையான சாந்தன்,நேற்று அதிகாலை சென்னையில் காலமானார்.

சுகவீனமுற்றிருந்த அவர் சென்னை ராஜீவ் காந்தி அரச பொது மருத்துவமனையில் தீவிர மருத்துவக் கண்காணிப்புடன் சிகிச்சை பெற்று வந்த நிலையிலே, அவர் காலமானார்.

இலங்கையிலுள்ள தனது தாயாரை பார்ப்பதற்காக ஓரிரு தினங்களில் நாட்டுக்கு வரவிருந்த அவர், நேற்று திடீரென உயிரிழந்துள்ளார்.

06



# நகர்வலம்



## நம்பிக்கையில்லாப் பிரேரணை

# சபாநாயகரை பாதுகாக்க முழுமையான ஆதரவு

### நாமல் ராஜபக்ச எம்பி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படுமானால் சபாநாயகரை பாதுகாப்பதற்கு பொதுஜன பெரமுன முழுமையான ஆதரவை வழங்கும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எத்தகைய சிந்தனையுடன் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றாரோ என தம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ச எம்பி, சபாநாயகரை பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, நிகழ்நிலை காப்புச் சட்டம் நீதிமன்றத்தின் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டே நிறைவேற்றப்பட்டதாகவும் சபாநாயகர் அதற்கான செயற்பாடுகளில் முறையாகவே செயல்பட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வருவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பாராளுமன்றம் மற்றும் அரசியலமைப்பின் நம்பிக்கையை அவர் மீறியுள்ளதாக தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் எம்பிக்கள் பலரும் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், லக்ஸ்மன் கிரியெல்ல, ஜீ.எல். பீரிஸ், திஸ்ஸ அத்தநாயக்க, சந்திம வீரக்கொடி மற்றும் ஷான் விஜயலால் டி சில்வா ஆகியோர் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தின் 13,17, 20, 33(6), 35 (1), 21,22, 31 ஆகிய சரத்துக்களுக்கு உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள யோசனைகளை கவனத்திற் கொள்ளாது சபாநாயகர் செயற்பட்டுள்ளார் என அந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அந்த சட்டமூலத்தில் சில சரத்துக்களை நிறைவேற்றும்போது உச்ச நீதிமன்றத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் அந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் சபாநாயகர் பாராளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டம் மற்றும் அரசியலமைப்பு ஆகியவற்றிற்கு முரண்பாடாக செயற்பட்டுள்ளார் என்றும் அந்த வகையில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மற்றும் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல் காலமானார்

**(வெலிகம தினகரன் நிருபர்)**



முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் தனது 99ஆவது வயதில் நேற்று முன்தினம் (27) பிற்பகல் கொழும்பு தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார் என அவரது குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

மூத்த அரசியல் வாதியான இவர், 1977ம் ஆண்டு மாத்தறை மாவட்ட தெவிநுவர தேர்தல் தொகுதியில் ஐ.தே. கட்சி சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றம் தெரிவானார். அன்று முதல் 1988ம் ஆண்டு வரை தொடர்ந்து நிதி அமைச்சராக 11 வருட காலம் சேவை புரிந்தார்.

1925 ஏப்ரல் மாதம் 11ம் திகதி பிறந்த இவர், ஆரம்ப கல்வியை கொழும்பு சென் தோமஸ் கல்லூரியில் கற்று, பின்பு இலங்கை பல்கலை கழகத்தின் பட்டதாரியாக வெளியேறினார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவரது மனைவி மல்லிகா. டி. மெல் 2000 2004 காலப் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். 11 வருடம் தொடர்ந்து நிதி அமைச்சராக இருந்த பெருமை றொனி டி மெல் சாரும்.

இவரது இழப்பு தென் மாகாணத்துக்கு மட்டுமல்லாது முழு நாட்டுக்கும் பேரிழப்பாகும். என அரசியல் பிரமுகர்கள் தெரிவிக்கின்றனர்.

# ரமழான் வசந்தம் கவியரங்கு இன்று கொழும்பில்

ஸ்ரீலங்கா ஜமாஅத்தே இஸ்லாமியின் தாருல் ஈமான் கலை இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்துள்ள ரமழான் வசந்தம் கவியரங்கு இன்று 29 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு கொழும்பு, தெட்டகொட வீதி, இல. 77 ல் அமைந்துள்ள பணிமனையில் நடைபெறும்.

மர்ஹூம் மறைதாசன் யூ. எம். தாஸீன் நத்வி அரங்கில் நடைபெறும் கவியரங்கில் தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமைத் தாங்குகிறார். கவிஞர்கள் அஷ்ஷெய்க் நாஸிக் மஜீத் (நளீமி), அஷ்ஷெய்க் இஸ்மத் அலி (நளீமி), புத்தளம் மரிக்கார், என். நஜ்முல் ஹுசைன் ஆகியோர் கவிதை பாடுகின்றனர்.



# எனசல்கொல்ல ஆரம்பப் பிரிவு பாடசாலையில் பரிசளிப்பு விழா

கண்டி, தெல்தோட்டை எனசல்கொல்ல ஆரம்பப் பிரிவு பாடசாலையின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்புவிழா பாடசாலையின் அதிபர் திருமதி சி.எம்.எப். சிமாராவின் தலைமையில் எதிர்வரும் மார்ச் மாதம் மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்து சிறப்பிக்கவுள்ளார். விசேட அதிதியாக கண்டி கல்வி வலய பணிப்பாளர் திரு. டி.சி.ஜே. அந்தரகே கலந்துகொள்வார்.

2023ஆம் ஆண்டு பல துறைகளிலும் சாதனை படைத்த மாணவர்கள் இந்நிகழ்வின்போது பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

# கற்பிட்டியில் சேவைநலன் பாராட்டு விழா





**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

கற்பிட்டி கோட்டமட்ட பாடசாலை அதிபர்களின் ஏற்பாட்டில் பாடசாலைகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ள அதிபர்கள் மற்றும் இவ்வருடம் ஓய்வு பெற உள்ள அதிபர்களின் சேவைநலன் பாராட்டு விழா நேற்று முன்தினம் ( 27) புத்தளம் வலயக் கல்வி பணிமனையின் பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதி காஞ்சலதா மற்றும் கற்பிட்டி கோட்டக் கல்வி பணிப்பாளர் திருமதி தீப்தி பெர்னாண்டோ ஆகியோரின் தலைமையில் கொய்யாவாடியில் அமைந்துள்ள மின்ஹாஜ் விடுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் தரம் 01 தரம் பெற்ற ரோஸ் புஹாரியின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் முகமாக புத்தளம் வலயக் கல்விப் பிரதி பணிப்பாளர் கற்பிட்டி கோட்டக் கல்வி பணிப்பாளர் மற்றும் தில்லையூர் பாடசாலையின் அதிபர் ஆகியோரால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பதுடன், அவர் இவ்வருடம் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பல்கலை மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரை விற்பனை

### 700 போதை மாத்திரைகளுடன் இருவர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மிஹிந்தலை பல்கலைக்கழக மாணவர்களை இலக்காகக் கொண்டு போதை மாத்திரைகளை விநியோகம் செய்துவந்த வியாபாரிகள் இருவரை 700 போதை மாத்திரைகளுடன் கைது செய்துள்ளதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்கள் 24 மற்றும் 28 வயதுடைய மிஹிந்தலைப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

அநுராதபுரம் இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய குறித்த பிரிவினர் கெப்பித்திகொல்லாவ கலால் வரி உத்தியோகத்தர்களுடன் இணைந்து சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.



இவர்கள் மதவாச்சி, கெப்பித்திகொல்லாவ, ஹொரவப்பொத்தானை மற்றும் கஹட்டகஸ்திகிலிய உள்ளிட்ட நகரங்களை இலக்காகக் கொண்டு இதற்கு முன்னர் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

பின்னர் மிஹிந்தலை பகுதியில் தற்காலிகமாக உணவகங்களில் தங்கி இருக்கும் பல்கலைக்கழக மாணவர்களை இலக்காகக் கொண்டு மிக நீண்ட காலமாக இந்த வியாபரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதில் பிரதான சந்தேக நபர்கள் மூவர் இருப்பதுடன் சுற்றிவளைப்பை மேற்கொண்ட போது ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். பின்னர் இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளததுடன் அவர்களின் மோட்டார் சைக்கிள் மற்றும் 700 போதை மாத்திரைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்களுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களை அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதன் பின்னர் சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் மீண்டும் எதிர்வரும் மார்ச் (29) அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# புத்தளம் அல் மினாவில் விடுகை விழா



புத்தளம், முதளைப்பாளி, அல் மினா மும்மொழி பாலர் பாடசாலையின் விடுகைவிழா, அண்மையில் முதளைப்பாளி முஸ்லிம் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

மக்கள் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளர் Z.A. தௌபீக் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார். மேலும், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் M.T.M.தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான ஆசிக், பைசல் மரைக்கார், றிபாஸ் நசீர் மற்றும் மௌலவி பஸால் சலபி, கவிக்குரல் மன்சூர், கவிஞர் முனவ்பர்கான் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், இளைஞர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# கொழும்பு 'கலாபொல' தேசிய கண்காட்சியில் திஹாரிய அல் அஸ்ஹர் பாடசாலை பங்கேற்பு









கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அண்மையில் நடைபெற்ற 'கலாபொல' திறந்தவெளி தேசிய கண்காட்சியில் இலங்கையின் பல மூத்த படைப்பாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இன்னும் பலர் கலந்து கொண்டனர். இதில் எந்த பாடசாலைகளும் கலந்துகொள்ளாத நிலையில் திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி மூன்று காட்சி கூடங்களில் பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களையும் திறன்களையும் வெளிப்படுத்தியிருந்தமை விசேட அம்சமாகும்.

மாணவர்களின் ஓவிய மற்றும் புத்தாக்க படைப்பாக்கங்களோடு கலந்து கொண்டதை கலந்து கொண்ட அனைவரும் பாராட்டினர். இலங்கையில் எத்தனையோ பாடசாலைகள் இருக்க இப் பாடசாலை மாத்திரம் கலந்து கொண்டமை பலரின் கவனத்தை ஈர்த்தது.

ஆசிரியர்கள் மத்தியில் வேலைப் பளு இருக்க மேற்படி பாடசாலையின் இரு ஆசிரியர்கள் மாத்திரம் மாணவர்களை வழிப்படுத்திக் கொண்டிருந்ததை இந்நிகழ்வில் காண முடிந்தது. அது சிறந்த ஆசிரியர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். மாணவர்கள் பல தேவையற்ற விடயங்களில் கவனம் செலுத்தும் சமகாலத்தில் மாணவர்களின் படைப்பாக்கங்களை காட்சிப்படுத்தி அவர்களின் திறமையை வெளிக்கொண்டு வந்த திஹாரிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியை அனைவரும் பாராட்டினர்.

# விவசாயக் கிணற்றில் வீழ்ந்த யானையும் குட்டியும் மீட்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மஹாமான்கடவல சியம்பலபதான பகுதியில் சோளம் செய்கை பண்ணப்பட்டு அறுவடை செய்யப்பட்ட காணியில் அமைந்துள்ள விவசாய கிணற்றில் விழுந்திருந்த யானை மற்றும் குட்டி யானையொன்றும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு வனத்தில் விடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் வனவிலங்கு அலுவலகம் தெரிவித்தது.

சுமார் 30 மற்றும் 03 வயதுடைய யானையும் யானை குட்டியும் இரண்டு நாட்களாக கிணற்றில் இருந்துள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய அநுராதபுரம் வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் பெகோ இயந்திரத்தின் உதவியுடன் விவசாய கிணற்றின் மேற்பகுதியை தோண்டி யானைகளை மீட்டுள்ளனர்.



குறித்த பகுதியில் 50 க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் சுற்றிதிரிவதன் காரணமாக அறுவடை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நெற்செய்கைக்கு பாரிய பாதிப்பு ஏற்ட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

# புதையல் தோண்டிய பிக்கு உள்ளிட்ட ஆறுபேர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு ஒருவர் உள்ளிட்ட ஆறு பேரை மீகஸ்வெவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று மாலை மீகஸ்வெவ பொலிஸ் பிரிவின் காமினிபுர இலுக்பிட்டிய பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது பிக்கு ஒருவர் உள்ளிட்ட ஆறு பேரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பிக்கு 33 வயதுடைய குறுகொடல்ல பகுதி விஹாரையில் வசிப்பவர் என்பதுடன் ஏனையவர்கள் 24,27,30,42,52 வயதுடைய மஹதலாகொளவெவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸ் மாஅதிபர் நியமனம் சட்டவிரோதமானதில்லை

## நீதி அமைச்சு அறிவிப்பு



பொலிஸ் மாஅதிபரின் நியமனம் அரசியலமைப்புக்கு முரணானது என்றால், பாராளுமன்றத்தில் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள சகல சட்டங்களும் செல்லுபடியற்றதாகும். அரசியலமைப்பு பேரவையின் 09 உறுப்பினர்களில் ஐவர் இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனால், இந்நியமனத்தை சட்ட விரோதமானதெனக் கூற முடியதென நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (27) நடைஇடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர், இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொலிஸ் மாஅதிபரின் நியமனம் அரசியலமைப்புக்கு முரணானதென பலராலும் வாதங்கள் முன்வைக்கப்படு கின்றன.இதை,ஏற்றுக் கொண்டால், இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட் சட்டமூலங்கள் எதுவும் செல்லுபடியற்றதாகிவிடும். அதாவது பொலிஸ் மாஅதிபர் நியமனத்தில் பெரும்பான்மை வாக்கு எண்ணிக்கையை ஏற்றுக் கொள்ளமுடியாதுஎன்றல்லவாஇவர்கள்குறிப்பிடுகின்றனர்?

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தினூடாக நாட்டிலுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் நீதித்துறை என்பவை சுயாதீனமாக செயற்படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தோம். அதற்கமையவே அரசியலமைப்பு பேரவை நிறுவப்பட்டது. அரசியலமைப்பு பேரவையிலுள்ள சகல உறுப்பினர்களதும் இணக்கப்பாட்டுடன் தீர்மானமொன்றை எடுப்பதற்கு அப்பேரவை முயற்சிக்க வேண்டும். யாப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இணங்க முடியாத சந்தர்ப்பத்திலேயே பெரும்பான்மை வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் இறுதி தீர்மானத்தை எட்டுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த நியமனத்தில் 09 உறுப்பினர்களில் ஆதரவாக ஐவர், வாக்களித்துள்ளனர் இதனால், இதுவே இறுதித் தீர்மானமாகிறது. சில சட்ட மூலங்கள் ஒரு வாக்கு வித்தியாசயத்தில் கூட நிறைவேற்றப்படுகின்றன. அவ்வாறெனில் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூற முடியாதல்லவா? எனவே பொலிஸ் மாஅதிபர் நியமனத்தை சட்ட விரோதமானது எனக் கூற முடியாது என்றார்.

# 2,000 கோடி ரூபா செலவில் 1,500 கி.மீ. வீதிகள் புனரமைப்பு

## தேசிய திட்டம் இன்று ஆரம்பம்

நாடு முழுவதும் 1,500 கிலோமீற்றர் வீதிகளை 2,000 கோடி ரூபா செலவில் புனரமைக்கும் வேலைத்திட்டம் இன்று (29) ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன .

கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளில், கொவிட்19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக முழு நாட்டிலும் கடுமையாக சேதமடைந்துள்ள வீதிக் கட்டமைப்பு, மேலும் அண்மையில் பெய்த அடைமழையால் ஏற்பட்ட மண்சரிவுகளால் அழிந்துபோன வீதி கட்டமைப்பை மீட்டெடுப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகுமென வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சார்தா வீரகோன் தெரிவித்தார்.

இச்சூழ்நிலையில்தான், இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் கொடுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ், நாடளாவிய ரீதியில் 1,500 கிலோமீற்றர் வீதிகளை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு இத்திட்டத்தை மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இன்று 500 கிலோமீட்டர் சீரமைப்புப் பணியும், மார்ச் 16 இல், இரண்டாவதாக 500 கிலோமீட்டரும், ஏப்ரல் 02 இல், மூன்றாவதாக 500 கிலோமீட்டரும் சீரமைக்கப் படும்.

# STF அதிரடி சுற்றிவளைப்பில் தேடப்பட்ட நபர் சுட்டுக்கொலை

## சூரியவெவயில் துப்பாக்கிச் சூடு



பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் நபரொருவர், சூரியவெவ பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வீடொன்றில் மறைந்துள்ளதாக நேற்று முன்தினம் (27) தகவல் கிடைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். அதற்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், சந்தேக நபரைக் கைது செய்வதற்காக அங்கு சென்றனர்.

இதன்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் சுடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எல்பிட்டிய - வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த 44 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மஹபாகே பகுதியில் கடந்த (21) இல், ஒருவரை சுட்டுக் கொலை செய்தமை மற்றும் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் வெல்லம்பிட்டிய பகுதியில் ஒருவரை சுட்டுக் கொலை செய்தமை ஆகிய சம்பவங்களில், இவர் சந்தே நபராகக் கருதப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# மின்சார வேலியில் சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

*தலவாக்கலை குறூப் நிருபர்*

தலவாக்கலை லிந்துலை ஹென்போல்ட் தோட்டத்தில் மரக்கறி தோட்டமொன்றில் சட்டவிரோதமாக போடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹென்போல்ட் தோட்டத்தில் வசிக்கும் தோட்ட தொழிலாளியான மதுரைவீரன் நாகராஜ் (56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரக்கறி தோட்டத்தில் பயிர்களை விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக போடப்பட்டிருந்த மின்சார வேலியின் வயர் அறுந்து கீழே வீழ்ந்துள்ளது.

இதன்போதே அதை கடந்து செல்ல முற்பட்டவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நுவரெலியா நீதவான் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சாந்த பண்டார தலைமையில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 17ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 18

### குறள் தரும் சிந்தனை



செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

செய்வதற்கு அருமையான செயல்களை செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

## அரச நிறுவனங்களை மேம்படுத்திய பொருளாதார வேலைத் திட்டங்கள்

தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதார வேலைத்திட்டங்கள் நம்பிக்கை தரும் பிரதிபலன்களை தரக்கூடியனவாக உள்ளன. 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. இந்நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு இப்பொருளாதாரத் திட்டங்கள் பாரிய பங்களிப்பை நல்கியுள்ளன. அதன் பயனாக பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் இந்நாட்டு மக்கள் முகம் கொடுத்த அசௌகரியங்களும் அழுத்தங்களும் பெரும்பாலும் நீங்கியுள்ளன.

2022 ஆம் ஆண்டின் ஜுலை மாதத்தின் பிற்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றார். அதனைத் தொடர்ந்து மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து பொருளாதார வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். அதன் பிரதிபலனாக பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில் நாடும் மக்களும் முகம்கொடுத்த அசௌகரிங்களும் நெருக்கடிகளும் குறுகிய காலப்பகுதி முதல் கட்டம்கட்டமாக அகலத் தொடங்கின.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலைமை மாத்திரமல்லாமல் அன்றாட மின்வெட்டும் கூட முடிவுக்கு வந்தது. வங்குரோத்து நிலைக்கு உள்ளாகி இருந்த நாட்டில் இப்பொருளாதார வேலைத்திட்டங்கள் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்புக்களையும் தோற்றுவித்தன.

அதேநேரம் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்த மக்களுக்கு நிவாரணங்களும் சலுகைகளும் கிடைக்கப்பெறவும் இப்பொருளாதார வேலைத்திட்டங்களே வழிவகை செய்தன. குறிப்பாக இந்நாட்டுக்கு 2022 இல் வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 2023 இல் இருமடங்காக அதிகரிப்பதற்கும் இப்பொருளாதாரத் திட்டமே அடித்தளமானது.

மேலும் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவும் இத்திட்டங்கள் பெரிதும் உதவியுள்ளன.

இவ்வாறான சூழலில், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, '2022 இல் 743 பில்லியன் ரூபா நஷ்டத்திற்கு உள்ளான 52 அரச நிறுவனங்கள் 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் 313 பில்லியன் ரூபா இலாபம் பெற்றுக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2022 இல் பல அரச நிறுவனங்கள் கடும் நெருக்கடிகளுக்கு உள்ளாகின. தம் ஊழியர்களுக்கு மேலதிக வேலைநேரக் கொடுப்பனவையோ, வாழ்க்கைச் செலவுப்படி உள்ளிட்ட மேலதிக அலவன்சுகளையோ வழங்க முடியாத நிலைக்கு உள்ளான சில நிறுவனங்கள் அடிப்படை சம்பளத்துடன் ஊழியர்களை வீடுகளில் இருக்கவும் அனுமதி அளித்தன. மேலும் சில நிறுவனங்கள் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை மாத்திரமே வழங்கியதோடு, இன்னும் சில அரச நிறுவனங்கள் அடிப்படைச் சம்பளத்தைக் கூட வழங்க முடியாத நிலைக்கு உள்ளாகின.

இந்நிலையில் அரச ஊழியர்கள் சம்பளம் அற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்லவும் அனுமதி அளிக்கப்பட்டது. அவ்வாறான நெருக்கடிகள் தற்போது பெரும்பாலும் நீங்கியுள்ளன. இதற்கு கடந்த வருடத்தின் முதல் 09 மாதங்களில் இந்த அரச நிறுவனங்கள் 313 பில்லியன் ரூபாவை இலாபமாக ஈட்டி இருப்பதும் நல்ல உதாரணமாகும். இது நாட்டையும் மக்களையும் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள வெற்றியும் பிரதிபலனும் ஆகும்.

இந்நாட்டில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட இப்பொருளாதார வேலைத்திட்டம் அடித்தளமிட்டுள்ளது. அந்த வகையில் அரச நிறுவனங்கள் இலாபம் ஈட்டும் வகையில் முன்னேற்றமடைந்துள்ளன. நாட்டுக்கும் மக்களுக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் இப்பொருளாதார வேலைத்திட்டங்கள் அமைந்திருப்பதையே இந்த அடைவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அதனால் கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட இப்பொருளாதார வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் தேவையும் ஆகும். கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாடு மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பயணிக்க வித்தூன்றிய இப்பொருளாதார வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டிய தேவையை நாடும் உணர்ந்துள்ளது.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களை அடிப்படையாகக் கொண்ட இப்பொருளாதார வேலைத்திட்டங்களுக்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். நாட்டு மக்கள் வளமான பொருளாதார வாழ்வைப் பெற்றுக்கொள்ள அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாக அது அமையும்.

editor.tkn@lakehouse.lk

# சர்வதேச ஸ்ரீமத் பகவத்கீதை–2024 மகோற்சவம் தாமரைத்தடாக மண்டபத்தில் நாளை ஆரம்பம்

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் கலாசார அமைச்சு, இந்து கலாசார திணைக்களம், இந்திய உயர்ஸ்தானிகராலயம், சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஏற்பாடு



சர்வதேச ஸ்ரீமத் பகவத்கீதை மகோற்சவம்_ 2024 இம்முறை இலங்கையில் நடத்தப்படுகின்றது. நாளை முதலாம் திகதி முதல் 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இம்மகோற்சவம் கொழும்பு_07 தாமரைத் தாடக மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்தியாவின் ஹரியானா மாநில குருப்பிரிவு அபிவிருத்தி சபையால் வருடாந்தம் பகவத்கீதை மகோற்சவம் நடத்தப்பட்டு வருகின்றது. அதன்படி இவ்வருடம் பகவத்கீதை மகோற்சவம் இலங்கையில் நடைபெறுகின்றது.

புத்தசாசன சமய கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் கலாசார அமைச்சு, இந்து கலாசார திணைக்களம், இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஆகியன இணைந்து சர்வதேச கீதை மகோற்சவத்தை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவையொட்டி ரங்கோலி கோலம் போடும் போட்டி, ஓவியம் வரையும் போட்டி, ஆன்மீக உடைப்போட்டி என்பனவும் கலாசார நிகழ்ச்சிகள், மகாபாரத கதாபாத்திரங்களைச் சித்திரிக்கும் கலை நிகழ்ச்சிகள், புத்தகக் கண்காட்சி, கைவினைப் பொருட்களுக்கான கண்காட்சி மற்றும் பரிசளிப்பு விழா என்பன இடம்பெறவுள்ளன.





நாளை வெள்ளிக்கிழமை இந்நிகழ்வுகள் ஆரம்பிக்கின்றன. நாளை மாலை 6 மணிக்கு சிறப்பு ஹோமமும் இரவு 8 மணிக்கு மாபெரும் இசைநிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன.

02 ஆம் திகதி சனிக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை சர்வமதத் தலைவர்கள் உள்ளடங்கலாக ஆய்வாளர்கள் மற்றும் புலமையாளர்கள் கலந்து கொள்ளும் மகாபாரத கருத்தரங்குகள் மும்மொழிகளில் மொழிபெயர்ப்பு வசதியுடன் நடைபெறும். மாலை 5 மணிக்கு அரச உயர்மட்ட அதிகாரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்திய உயர்ஸ்தானிகர், ஆலய அறங்காவலர்கள் உள்ளடங்கலான முக்கிய பிரமுகர்களின் பங்களிப்புடன் பிரதான வைபவம் இடம்பெறவுள்ளது.

அன்றிரவு ஏழு மணிக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மாணவிகள் வழங்கும் சிறப்புக் கலை ஆற்றுகை நிகழ்ச்சியும் ஏனைய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. அன்று இசை நிகழ்ச்சியுடன் இரண்டாம் நாள் நிகழ்வு நிறைவடையும்.

03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் கைவினை கண்காட்சி, புத்தகக் கண்காட்சி மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும். அன்று மாலை 5 மணி தொடக்கம் யாகம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து சோபன யாத்திரா இடம்பெறும். சோபன யாத்ராவில் மகாபாரதக் கதைகளின் கதாபாத்திரங்களை உள்ளடக்கிய ஆற்றுகைகளோடு, கலைநிகழ்ச்சிகள் ஏனைய கண்கவரும் கலாசார பண்பாட்டு அம்சங்கள் நடைபெறவுள்ளன.

## பாராளுமன்ற செயற்பாடுகள், நடைமுறைகள்;

# குறுகியகால நெறியை நிறைவு செய்துள்ள யாழ் பல்கலைக்கழக மாணவருக்கு சான்றிதழ்

இலங்கை பாராளுமன்றத்தினால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பாராளுமன்ற செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்த குறுகியகால நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் வெகுவிமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.



பாராளுமன்ற நடைமுறைகள் தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விரிவான புரிதலை வழங்கும் நோக்கில் இலங்கை பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பொதுமக்கள் வெளித்தொடர்புப் பிரிவினால் இப்பாடநெறி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஊடகத்துறை மாணவர்களின் கல்விக்காக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடநெறிக்கான வளவாளர்களாகப் பாராளுமன்ற செயலகத்தின் உயர்அதிகாரிகள் பங்களிப்புச் செய்தனர். இதன் போது, பாராளுமன்றமும் அதன் சட்டவாக்க செயன்முறையும், பாராளுமன்ற மரபுகள், பாராளுமன்றக் குழுக்கள், பொதுமக்கள் பங்கேற்பு, பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவம், திறந்த பாராளுமன்ற எண்ணக்கரு, அரசியலமைப்பு மறுசீரமைப்பு போன்றன தொடர்பில் விரிவான புரிதல் வழங்கப்பட்டதுடன், பல்வேறு நாட்கள் இடம்பெற்ற இந்தப் பாடநெறியில் பல பிரிவுகள் மற்றும் துணைப் பிரிவுகளின் கீழ் விரிவுரைகள் மற்றும் நடைமுறைச் செயற்பாடுகளும் உள்ளடங்கியிருந்தன.



இங்கு யாழ் பல்கலைக்கழ மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, ஜனநாயக ஆட்சி முறையில் இளைஞர் சமூகத்தினருக்கு விசேட பொறுப்புகள் காணப்படுவதுடன், அதில் விரிவான இளைஞர் பங்களிப்புக்கு திறந்த வழிமுறையொன்றை இலங்கை பாராளுமன்றம் பின்பற்றுவதாகச் சுட்டிக்காட்டினார்.



குழுக்களில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிப்பதன் மூலம் இளைஞர் சமூகத்தினரின் கருத்துகளையும் அபிலாஷைகளையும் சட்டவாக்கத்துக்கு நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளமை மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு தற்பொழுது பாராளுமன்றத்தில் பயிற்சி வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல் என்பன பாராளுமன்றத்தில் இளைஞர் பங்களிப்பை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகளாகும் என அவர் தெரிவித்தார்.



இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம் மற்றும் விரிவுரையாளர்கள், தேசிய ஜனநாயக நிறுவனத்தின் இலங்கைப் பணிப்பாளர் அசோக ஒபேசேகர உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா ஆகியோருக்கிடையில் இதன்போது விசேட சந்திப்பொன்று இடம்பெற்றதுடன், இங்கு பாராளுமன்ற முறைமை மற்றும் பாராளுமன்றத்தினால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நடத்தப்படும் பாராளுமன்ற செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்த குறுகியகால பாடநெறி தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

**எச்.ஈ.ஜனகாந்த சில்வா...**
பணிப்பாளர் நிர்வாகம்/பணிப்பாளர் தொடர்பாடல் (பதில்) இலங்கை பாராளுமன்றம்

# விருதுநகர் ரோட்டரி கழக அனுசரணையில் மாணவிகளுக்கான 'யாதுமானவள்' நிகழ்வு

தமிழ்நாடு விருதுநகர் ரோட்டரி மாவட்டம் 3212 கிளப் அனுசரணையில் முனைவர் ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணனின் மாணவிகளுக்கான தன்னம்பிக்கையூட்டும் 'யாதுமானவள்' நிகழ்வு இலங்கையில் சுமார் 14 தடவை நடைபெறுகின்றது.

முதலாவது நிகழ்வு 'அரோ அறக்கட்டளை அமைப்பின்' அனுசரணையில் கண்டி கல்வி வலயத்தின் மாணவ மாணவிகளுக்கான நிகழ்வாக கண்டி இந்து கலாசார மண்டபத்தில் 19.02.2024 அன்று திருமதி பிரியா கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரி மாணவர்களின் கடவுள் வாழ்த்து, கண்டி பதியுத்தீன் மகளிர் கல்லூரி மாணவிகளின் கிராத் ஓதுதல் மற்றும் கிறிஸ்தவ ஆராதனையுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் கண்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தமிழ்செல்வன் அவர்களின் வரவேற்புரையை தொடர்ந்து கண்டி சத்ய சாயி கலாலய மாணவர்களின் வரவேற்பு நடனம் நடைபெற்றது.

கௌரவிப்பு நிகழ்வில் தமிழ்நாடு விருதுநகர் ரோட்டரி கழகத்தின் செயற்திட்டத் தலைவி திருமதி ரி. விஜயகுமாரி அவர்களுக்கான கௌரவத்தையும், மத்திய மாகாண இந்து மாமன்ற தலைவர் துரை.சிவசுப்ரமணியம், மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி அருந்ததி சத்தியேந்திரா ஆகியோருக்கான கௌரவம் இடம்பெற்றது.

சிறப்புச் சொற்பொழிவாளர் முனைவர் ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களின் தன்னம்பிக்கையூட்டும் 'யாதுமானவள்' என்ற சிறப்பு சொற்பொழிவும், அவருக்கான கௌரவமும் இடம்பெற்றன. நன்றியுரையை




கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரி அதிபர் பி. சிவகுமார் வழங்கினார்.

இரண்டாம் நாள் 20.02.2024 நிகழ்வு தெல்தெனிய, வத்தேகம ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவிகளுக்காக முனைவர் ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களால் கண்டி பல்லேகலவில் நடைபெற்றது.

முனைவர் ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களுக்கான கௌரவமும், கடந்த பதினைந்து வருடங்களாக இப்பிரதேசத்தில் கல்விப்பணி, சமூகப்பணி, ஆகிய பணிகளையும் முன்னெடுத்து வருகின்ற 'அரோ அறக்கட்டளை அமைப்பின்' தலைவி திருமதி பிரியா கார்த்திக் அவர்களுக்கான கௌரவமும் இடம்பெற்றன.

மூன்றாம் நாள் நிகழ்வு (21.02.2024) நாவலப்பிட்டி பஸ்பாகே கோரலே கல்வி வலயத்தின் மாணவிகளுக்காக நாவலப்பிட்டி கிராண்ட் பெவிலியன் மண்டபத்தில் வலய கல்விப் பணிப்பாளர் உமேஸ்காந்தன் தலைமையில் நடைபெற்றது.

முனைவர் ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களுக்கான கௌரவமும், சிறப்பான கேள்விகளை கேட்ட மாணவிகள் இருபது பேருக்கான பாராட்டும் இடம்பெற்றன. அங்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கான உணவுகளை பிரபல வர்த்தகர் எஸ். ஞானசேகரன், திருமதி மணிமேகலா ஞானசேகரன் வழங்கினர்.

நான்காம் நாள் (22.02.2024) நிகழ்வு அட்டன் கல்வி வலயத்தின் மாணவிகளுக்காக மலையக மகளிர் மன்றத்தின் ஏற்பாட்டில் 'பிரின்ஸ் மண்டபத்தில்' அட்டன் வலய கல்விப்பணிபாளர் விஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்நாடு விருதுநகர் ரோட்டரி மாவட்டம் 3212 கிளப் செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர். மண்டபத்தை வழங்கி உதவிய அசோகன், அட்டன் வலய கல்விப்பணிபாளர் நரேந்திரன் ஆகியோர் மலையக மகளிர் மன்றத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த மாணவிகளுக்கான தன்னம்பிக்கையூட்டும் 'யாதுமானவள்' நிகழ்வுகளிலும் சுமார் 3500 மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இவ்வாறான எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களான மாணவச் செல்வங்களுக்கான நிகழ்வுகளை ஒழுங்கமைத்த 'அரோ அறக்கட்டளை அமைப்பின்' ஸ்தாபக தலைவி திருமதி பிரியா கார்த்திக் அவர்களுக்கும், மலையக மகளிர் மன்ற தலைவர் செயலாளர் அவர்களுக்கும் பலரும் நன்றி தெரிவித்தனர்.

**சிந்துஜா கோபிநாத்...**

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2024.02.27
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5403
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 42,453,720.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 7 5 2 6 5 8

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3645
சீட்டிழுப்பு திகதி 2024.02.27
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,329,478.32
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 06 15 22 29
விசேட எழுத்து D
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 24709

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1751
2024.02.27
11072
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 425,318,386.00
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 13 14 19 41
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP**
திகதி 2024.02.27
சீட்டிழுப்பு இலக்கம் 0229
ஆங்கில எழுத்து X
L7 எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 1 9 6 3 4 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 25,923,535.88

**ராசி சுப பலன்**
திகதி 2024.02.27
சீட்டிழுப்பு இலக்கம் 712
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,894,953.48
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 09 25 45 53
தனயோக இலக்கம் 17185
நாளுக்கான விதி எண் 04

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1433
2024.02.27
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,435,432.88
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 07 10 66 78
விசேட எழுத்து B
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 01476

# மக்கள் வங்கி

## மாத்தளை பிராந்தியம்

### அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 2022.11.30ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட ஒரு வருட காலத்தில் மீட்டுக்கொள்வதற்கு உட்பட்டு அடகு வைக்கப்பட்டு. 2024.03.15ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முழவடையும் வரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9 மணிக்கு ஆரம்பித்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**விற்பனை நடைபெறும் திகதி 2024.0316 மற்றும் 2024.03.17**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | மாத்தளை | தம்புள்ள |
|---|---|---|
| கிளை | மாத்தளை, உக்குவெல, இரத்தொட்ட, பல்லேபொல | தம்புள்ள, கலேவெல, நாஉல, வில்கமுவ |
| சேவை நிலையம் | திருகோணமலை வீதி, கொங்காவல, கூம்பியணய்கொட வராகமுற, கைகாவல சடவத்த | இனாமழுவ, மடாட்டுகம தேவஙுவ ,மடவல - உல்பத லக்கல - பல்லேகம |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள படி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீள அறிவிக்காமல் வங்கியின் தற்றுணிவின் படி இரத்துச் செய்வதற்கு ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர் பிராந்திய தலைமைக் அலுவலகம்,
இலக்கம் 76, தர்மபால மாவத்தை, மாத்தளை,
தொலைபேசி இலக்கம் : 066-2234212 / 066-2222032

www.peoplesbank.lk
PEOPLE'S BANK
Pride of the Nation

# புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகம்

## சுற்றாடல் அமைச்சு

## மட்டக்களப்பு பிரதேசத்தில் விடுதி ஒன்றிற்காக வீடொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறல்

புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகத்தின் மட்டக்களப்பு அலுவலகத்தின் அதிகாரிகளுக்கு விடுதி ஒன்றிற்காக வீடொன்று வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கு தேவைப்பட்டுள்ளது. இதனோடு சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை **www.gsmb.gov.lk** இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

# டொயோட்டா லங்கா (பிரைவேட்) லிமிடெட்

## ஏலவிற்பனை

ST&IS SINCE 1892
TOYOTA

உபயோகத்தில் இல்லாத பெருந்தொகையான பொருட்கள் உட்பட, மேசைகள் மற்றும் சுழலும் அலுவலக நாற்காலிகள், பட்டரி டெஸ்டர்கள், தொழிற்துறை விசிறிகள், தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், வெளியேற்ற விசிறிகள், குளிரூட்டிகள், கருவிகள் மற்றும் கருவிப் பெட்டிகள், உயர் அழுத்த வோஷர்கள், பெயின்ற் ஸ்பிரே கன்கள், வாகன உயர்த்திகள், கூரைகளுக்கான சீட்டுகள், தொழிற்துறை சலவை இயந்திரங்கள், அலொய் வீல்கள், பாவித்த டயர்கள், உதிரிப்பாகங்கள், வெக்கும் கிளீனர்கள், ரேக்கிங் பொருட்கள் உட்பட மேலும் பல ஒட்டோமொபைல் மற்றும் தொழிற்துறைகளுடன் தொடர்புடைய பொருட்கள்.

**2024 மார்ச் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
டொயோட்டா லங்கா ஹினோ சேர்விஸ் சென்டர்
இல. 42, பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளை**
என்ற முகவரியில்
(OKI இன்டர்நஷனல் பாடசாலை எதிர்)
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**பார்வையிடல் - ஏலவிற்பனை நிலையத்தில்
2024 மார்ச் 01 வெள்ளி மற்றும்
02 சனிக்கிழமை தினங்களில்**
(மு.ப 9.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை)

**விற்பனை நிபந்தனைகள்**

- நுழைவு : ஏல விற்பனை நடைபெறும் ஒவ்வொரு தினத்திலும், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 100,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- கொடுப்பனவுகள் : விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 50% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 50% ஐயும் 2024 மார்ச் 04ஆந் திகதி திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு முன்னர் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- முகாமைத்துவத்தின் / ஏலதாரரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®**
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
011 2671468
www.sandslanka.com

# மீட்கப்படாத அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளின் பொது ஏலவிற்பனை

மக்கள் வங்கி இரத்தினபுரி பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 2022.11.30 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 2024.03.15 ஆம் திகதி வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ள திகதி மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி பொது ஏலத்தில் விற்கப்படும் என்பதை தெரியப்படுத்துகிறோம்.

| | |
|---|---|
| ஏலவிற்பனை நிகழும் திகதி | 2024.03.16 மற்றும் 2024.03.17 |
| ஏலவிற்பனை நிகழும் இடம் | மக்கள் வங்கி - இரத்தினபுரி நகர கிளை முதலாம் மாடி (குடுகல்வத்தை) |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள் | எம்பிலிபிட்டிய, பெல்மடுல்ல, உடவலவை, கொடகவெல இறக்குவானை, கஹவத்தை, பலாங்கொடை, எஹலியகொடை, இரத்தினபுரி, இரத்தினபுரி நகரம், கல்தோட்டை, குருவிட்ட, கிரியெல்ல, நிவிதிகல, கல்வானை, பல்லேபெத்தை. |
| அடகு வைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்கள் | பதலங்கல, கொலன்ன, செவனகல, ஓபனாயக்க, பம்பஹின்ன, வெலிகெபொல, எஹெலியகொடை, இரத்தினபுரி புதிய நகரம், வெவெல்வத்தை, வேலிஓயா, அயகம, கரவிட்ட |

இந்த ஏலவிற்பனை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைந்து செயற்பட அல்லது ஏலத்தை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமையுண்டு என்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய தலைமை காரியாலயம், புதிய நகரம், இரத்தினபுரி

தொலைபேசி இலக்கம் -0452223084 / 0452230818

www.peoplesbank.lk
PEOPLE'S BANK
Pride of the Nation

# 2024/2025ம் ஆண்டிற்காக காணிச் செயலகம், காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்குச் சொந்தமான அலுவலகங்களுக்கு மற்றும் இரத்மலானை காணி உரித்து நிர்ணய புதிய அலுவலகத்திற்கு பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான விலைமனுக் கோரல்

பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, இல. 1200/6, “மிஹிகத்த மெதுர” காணிச் செயலகத்தின் கீழே காணப்படும் அலுவலகங்களுக்கு 2024.04.15 முதல் 2025.04.14 வரை ஒருவருட காலம் சார்பாக பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துள்ள பாதுகாப்புச் சேவை நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

(அ) காணிச் செயலகம், “மிஹிகத்த மெதுர”, இல. 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல

(ஆ) அரச காணி தகவல்கள் மற்றும் முகாமைத்துவ நிலையம், உலக உணவுக் களஞ்சியம் மற்றும் காணி உரித்து நிர்ணய புதிய அலுவலகம், பொருபன வீதி, இரத்மலானை.

02. கேள்விதாரர்கள் பாதுகாப்புச் சேவைகள் வழங்குவதில் அதிகாரம் மற்றும் தகைமையுள்ள வழங்குநர்களாக இருத்தல் வேண்டும். இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையான கேள்விதாரர்களுக்கு 2024 பெப்ரவரி 29 முதல் 2024 மார்ச் 19வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் ஒரு பெறுகை ஆவணத்தொகுதிக்கு ரூ. 3500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி மற்றும் கீழ்க்காணும் முகவரிக்கு எழுத்துமூல வேண்டுதலை மேற்கொள்வதன் மூலம் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இக் கொடுப்பனவு காசாக மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். கேள்வி ஆவணங்களை கீழேயுள்ள முகவரியில் எந்தக் கட்டணமும் இல்லாமல் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது ரூ.110,000.00 கொண்ட கேள்விப் பிணையொன்றை சகல கேள்வியுடனும் சமர்ப்பித்தல் வேண்டும். (அது மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட பிணையாக சமர்ப்பித்தல் அல்லது காசாக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்) 2024.03.20 முதல் எதிர்வரும் 45 நாட்களுக்கு செல்லுபடியாகுமாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

05. பொறியிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், காணிச் செயலகம், “மிஹிகத்த மெதுர” இல. 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது திணைக்களத்தின் கணக்குக் கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான கேள்வி 2024/2025” என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்வி ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் 2024.03.20 பி.ப. 2.00 இற்கு முடிவடைவதுடன் அந்தநேரம் தாண்டியவுடன் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

07. மேலதிக விபரங்கள் தேவைப்படின் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் கணக்காளர் (வழங்கல்கள்) இடம் பெற்றுக் கொள்ளலாம். தொ.பே.இலக்கம் 011 - 2797434 ஆகும்.

**காணி ஆணையாளர் நாயகம்,
தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
காணி ஆணையாளர் நாயகம்
திணைக்களம்,
“மிஹிகந்த மெதுர” இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல
2024.02.27**

**என்.ஏ.ஏ. சியாமலி
கணக்காளர் (வழங்கல்கள்)
காணி ஆணையாளர்
நாயகம் சார்பாக**

# இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க 2000 ஆம் ஆண்டு 54 இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

08.01.2024 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு ஜே.எம்.ஆர்.என்.எல். குணதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2018.09.06 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1122, 2021.01.07 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1942 மற்றும் 2017.05.25 திகதியிட்ட ஈட்டு முறி இல. 459 ஆகியவற்றின் பேரில் தம்பதெனிய, மும்மான பத்திரன மர ஆலையின் ஏக உரிமையாளர் திரு. லியன பத்திரன்னஹலாகே ஷாந்த குமார பத்திரன என்பவரிடமிருந்து 1ஆவது கடன் வசதி மீது 2023.11.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 17,154,624.59 (பதினேழு மில்லியன் நூற்று ஐம்பத்து நான்காயிரத்து அறுநூற்று இருபத்து நான்கு ரூபாய் ஐம்பத்தொன்பது சதமும்) அத்துடன் ரூ.11,929,339.46 (பதினொரு மில்லியன் தொள்ளாயிரத்து இருபத்தொன்பது ஆயிரத்து முந்நூற்று முப்பத்தொன்பது ரூபாய் நாற்பத்தாறு சதம்) மீது ஆண்டுக்கு ஒன்பது தசம் ஐந்து (9.5%) வீதத்தில் 2023.11.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 2வது கடன் மீது 2023.11.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 13,039,161.83 (பதின்மூன்று மில்லியன் முப்பத்தொன்பது ஆயிரத்து நூற்று அறுபத்தொரு ரூபாய் எண்பத்து மூன்று சதமும்) அத்துடன் ரூ. 8,164,864.48 (எட்டு மில்லியன் நூற்று அறுபத்துநான்காயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு ரூபாய் நாற்பத்தெட்டு சதம்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் ஐந்து (13.5%) வீதத்தில் 2023.11.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 3ஆவது கடன் வசதி மீது 2023.11.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 6,230,262.98 (ஆறு மில்லியன் இருநூற்று முப்பதாயிரத்து இருநூற்று அறுபத்திரண்டு ரூபாய் தொண்ணூற்றெட்டு சதமும் அத்துடன் ரூ. 3,845,591.62 (மூன்று மில்லியன் எண்ணூற்று நாற்பத்தைந்தாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்றொரு ரூபாய் அறுபத்திரண்டு சதம்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் எட்டு ஆறு (13.86%) வீதத்தில் 2023.11.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 4ஆவது கடன் வசதி மீது 2023.11.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 1,973,519.63 (ஒரு மில்லியன் தொள்ளாயிரத்து எழுபத்து மூன்றாயிரத்து ஐந்நூற்று பத்தொன்பது ரூபாய் அறுபத்து மூன்று சதமும்) அத்துடன் ரூ.1,300,000.00 (ஒரு மில்லியன் முந்நூறாயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்துமூன்று தசம் இரண்டு ஐந்து (23.25%) வீதத்தில் 2023.11.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 5ஆவது கடன் வசதி மீது 2023.11.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 4,809,652.21 (நான்கு மில்லியன் எண்ணூற்றொன்பது ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்திரண்டு ரூபாய் இருபத்தொரு சதமும்) அத்துடன் ரூ. 3,360,440.16 (மூன்று மில்லியன் முந்நூற்று அறுபதாயிரத்து நானூற்று நாற்பது ரூபாய் பதினாறு சதம்) மீது ஆண்டுக்கு பதினைந்து தசம் ஒன்பது நான்கு (15.94%) வீதத்தில் 2023.11.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட பிரசித்த நொத்தாரிசு ஜே.எம்.ஆர்.என்.எல். குணதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2018.09.06 திகதியிட்ட ஈட்டு முறி இல.1122, 2021.01.07 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1942 மற்றும் 2017.05.25 திகதியிட்ட ஈட்டு முறி இல.459 ஆகியவற்றின் பேரில் 1ஆவது கடன் வசதி மீது 2023.11.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.17,154,624.59 (பதினேழு மில்லியன் நூற்று ஐம்பத்து நான்காயிரத்து அறுநூற்று இருபத்து நான்கு ரூபாய் ஐம்பத்தொன்பது சதமும்) அத்துடன் ரூ.11,929,339.46 (பதினொரு மில்லியன் தொள்ளாயிரத்து இருபத்தொன்பது ஒன்பது ஆயிரத்து முந்நூற்று முப்பத்தொன்பது ரூபாய் நாற்பத்தாறு சதம்) மீது ஆண்டுக்கு தசம் ஐந்து (9.5%) வீதத்தில் 2023.11.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 2வது கடன் மீது 2023.11.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 13,039,161.83 (பதின்மூன்று மில்லியன் முப்பத்தொன்பது ஆயிரத்து நூற்று அறுபத்தொரு ரூபாய் எண்பத்து மூன்று சதமும்) அத்துடன் ரூ. 8,164,864.48 (எட்டு மில்லியன் நூற்று அறுபத்து நான்காயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு ரூபாய் நாற்பத்தெட்டு சதம்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் ஐந்து (13.5%) வீதத்தில் 2023.11.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 3ஆவது கடன் வசதி மீது 2023.11.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.6,230,262.98 (ஆறு மில்லியன் இருநூற்று முப்பதாயிரத்து இருநூற்று அறுபத்திரண்டு ரூபாய் தொண்ணூற்றெட்டு சதமும்) அத்துடன் ரூ. 3,845,591.62 (மூன்று மில்லியன் எண்ணூற்று நாற்பத்தைந்தாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்றொரு ரூபாய் அறுபத்திரண்டு சதம்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் எட்டு ஆறு (13.86%) வீதத்தில் 2023.11.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 4ஆவது கடன் வசதி மீது 2023.11.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 1,973,519.63 (ஒரு மில்லியன் தொள்ளாயிரத்து எழுபத்து மூன்றாயிரத்து ஐந்நூற்று பத்தொன்பது ரூபாய் அறுபத்து மூன்று சதமும்) அத்துடன் ரூ.1,300,000.00 (ஒரு மில்லியன் முந்நூறாயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்து மூன்று தசம் இரண்டு ஐந்து (23.25%) வீதத்தில் 2023.11.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 5ஆவது கடன் வசதி மீது 2023.11.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 4,809,652.21 (நான்கு மில்லியன் எண்ணூற்றொன்பது ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்திரண்டு ரூபாய் இருபத்தொரு சதமும்) அத்துடன் ரூ.3,360,440.16 (மூன்று மில்லியன் முந்நூற்று அறுபதாயிரத்து நானூற்று நாற்பது ரூபாய் பதினாறு சதம்) மீது ஆண்டுக்கு பதினைந்து தசம் ஒன்பது நான்கு (15.94%) வீதத்தில் 2023.11.20 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. M.H.T. கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கிரிஉல்ல கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

1. வடமேல் மாகாணம் குருணாகல் மாவட்டம் தம்பதெனி ஹத்பற்று உடுகஹகோரளை மேற்கில் நாரம்மல பிரதேச சபை எல்லைகளுள் நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் தம்பதெனிய தெற்கு கிராம சேவகர் பிரிவில் தம்பதெனிய கிராமத்தில் அமைந்த “பங்கலாவத்த எஸ்டேற்” என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர்.எம்.புஷ்பதேவ தயாரித்த 2016.11.07 திகதியிட்ட வரைபடம் இல. 15864 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 1, வடகிழக்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ.டபிள்யு. டி நியொஸ் தயாரித்த வரைபடம் இல. 481 இல் காணித்துண்டு 27உம், தென்கிழக்கில் ஐராங்கனி பீரிஸ் உரிமை கோரும் நெல் வயலும், தென்மேற்கில் கே.ஏ. கருணாரத்ன உரிமை கோரும் காணியும், வடமேற்கில் பிரதான பாதையும் (கிரி உல்ல நாரம்மல) எல்லைகளாகக் கொண்டு இருபத்திரண்டு தசம் ஒன்பது பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0 பே.22.9) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், வீடுகள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நாரம்மல காணிப்பதிவகத்தில் T179/18 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

**திரு. ஈ.ஏ.ஏ. சஞ்ஜீவ
முகாமையாளர்**

**இலங்கை வங்கி
கிரிஉல்ல கிளை.**

இலங்கை வங்கி BOC

Looking for your Life Partner...?
Gather with...
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Affordable & Attractive Packages for YOU...
Package - 01
Sunday Observer Paper + Internet
Package - 02
Sunday Observer Paper + Silumina Paper + Internet
Package - 03
Sunday Observer Paper + Silumina Paper + Tharunee Paper + Internet
Package - 04
Sunday Observer Paper + TKN Varamanjari Paper + Internet
* Conditions Apply
Send your enquiries directly to the Matrimonial and Classified Section to minimize any inconvenience that may occur.
classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 | 011 2 429 342/ 343

# அகரெல்ல பாலத்துக்கு பதிலாக 168 கோடி ரூபாவில் புதிய பாலம்

## நெதர்லாந்து கடனுதவியில் திட்டம்

110 வருடங்கள் பழமையான உடவெல அகரெல்ல பாலத்துக்கு பதிலாக 168 கோடி ரூபா செலவில் நெதர்லாந்து கடனுதவியுடன் புதிய பாலம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை நெதர்லாந்து அரசாங்கம் வழங்கியுள்ளது. இதன் ஆரம்பப் பணிகள்

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்புதிய பாலத்தின் கட்டுமானப் பணிகள் 23 அடி அகலத்தில் இரண்டு தடவழிப்பாதையுடன் கட்டப்படவுள்ளது. ஆறு மாதங்களுக்குள் இப்பணிகள் முடிக்கப்படும். பாலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் கெரெல்ல ஸ்ரீ சுதர்சனராமாயா விகாரையில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன.



“பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சாவின் ஆட்சிக் காலத்தில் இறக்குவான, பெல்மதுல்ல, ஓபநாயக்க பிரதேசங்களில் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சராக இருந்தேன். இறக்குவான, பெல்மதுல்ல, ஓபநாயக்க ஆகிய பிரதேசங்களின் பிள்ளைகளுக்கு தொழில்நுட்பம் என்ற பாடத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்தக் கிராமங்களிலும், நாட்டிலும் உள்ள சாதாரண மக்களுக்கு தனிப்பட்ட முறையில் எவ்வளவு முயன்றாலும் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. அவர்களால் பாலங்கள், மின்சாரம், சாலைகள் ஏற்படுத்த முடியாது. மக்களால் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்கு தீர்வு காண நாட்டு மக்கள் பொறுப்பான அரசாங்கத்தை நியமிக்க வேண்டும். சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அளவுக்கு அதிகமான பணிகளைச் செய்ய முயன்றன. இலவச கல்வியின் கீழ் கல்வியை தொடர்ந்து வழங்கி வருகிறோம். உலக நாடுகள் மருந்துகளுக்குப் பணம் வசூலிக்கும் போது , கடினமான இருதய அறுவை சிகிச்சை முதல் அனைத்தையும் அரசாங்கம் இலவசமாக வழங்குகிறது. சகல மூலதனத் திட்டங்களும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன் வாங்கியே செய்யப்பட்டுள்ளன. மக்கள் இவ்விடத்தில் தெளிவான முடிவுக்கு வரவேண்டும் என்றார்.

## இனவாதம், மதவாதத்தை புறக்கணித்து...

போரை எதிர்கொண்டோம். யுத்தம் முடிவடைந்த பின்னர் சகவாழ்வு தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் அனைத்து மதத் தலைவர்களுக்கும் பெரும் பொறுப்புள்ளது. நம் எண்ணங்களில் கவனம் செலுத்த வேண்டும். அரசியல் வாதிகளின் எண்ணம் அதிகாரத்தைப் பெறுவதிலே உள்ளது. அந்தந்த இடங்களில் இருக்க வேண்டும் என்பதே மதத் தலைவர்களின் சிந்தனை. இதற்கெல்லாம் குறுக்குவழி இனவாதம் மற்றும் மதவாதமாகும். 1930இல், நம் நாட்டில் இது நடந்து வருகிறது. இறுதி முடிவு என்ன என்பதை நான் குறிப்பிடத் தேவையில்லை.

உதாரணமாக, சிங்கப்பூரில் இனவாதமோ மதவாதமோ இல்லை. பல மொழிகள் பேசுவோர் இருந்தாலும், சிங்கப்பூர் இன்று துரித வளர்ச்சியை அடைந்துள்ளது.

தற்போது யுத்தம் இல்லாததால் நாட்டின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகின்றது. எனவே சகவாழ்வில் கவனம் செலுத்த வேண்டும். இதுபற்றி பாராளுமன்றத்திலும் ஆராய்ந்து வருகிறோம். இலங்கையில் தேசிய மற்றும் மத சகவாழ்வை உறுதிப்படுத்தும் குழுவின் தலைவராக கரு ஜயசூரிய செயற்பட்டார். 2018 மார்ச்சில் முஸ்லிம்கள் தொடர்பான மோதல்கள், 2017 இல் காலியில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் 2014 இல் பேருவளையில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பில் மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இத்தெரிவுக் குழுக்களால் பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. அந்த முன்மொழிவுகளை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டோம். நாங்கள் ஒரு குழுவாக இணைந்து பணியாற்றினோம். அப்படியானால், அந்த உடன்பாட்டின் படி நாம் நடக்க வேண்டும்.

## அஸ்வெசும பயனாளிகள்...

இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பம் கோரல் 2024 மார்ச் 15 ஆம் திகதியுடன் நிறைவடையும் என்றும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காதவர்கள் எவரும் அஸ்வெசும பலனைப் பெறத் தகுதி பெற மாட்டார்கள் எனவும் இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தினார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (28) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பொய்யான தகவல்களின் மூலம் அஸ்வெசும நன்மைகளைப் பெற்ற சுமார் 7000 பேர், அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர், அஸ்வெசும முதல் கட்ட கணக்கெடுப்பில், 34 இலட்சம் குடும்ப அலகுகளின் தகவல்கள் சரிபார்க்கப்பட்டன. இதன் படி 19 இலட்சம் குடும்பங்கள் பயன் பெற தகுதி பெற்றுள்ளன. இதுவரை பெறப்பட்ட மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளின் அடிப்படையில், ஜூலை 2024 முதல் தகுதியானவர்களுக்குப் பணம் செலுத்த நலன்புரி நன்மைகள் சபை தயாராக உள்ளன . எங்களுக்கு 12,27,000 முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் கிடைத்துள்ளன. அவர்களில் சுமார் 11,97,000 பேர் தொடர்பில், இதுவரை பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகைக்கு மேலதிகமாக, அஸ்வெசும உதவிகள் உண்மையிலேயே தகுதியான ஒரு குழுவினருக்கு கிடைக்கவில்லை. முதல்கட்ட விண்ணப்பத்தில் அவர்களுக்கு விண்ணப்பப் படிவங்களை வழங்காததால், அவர்களுக்கு அஸ்வெசும பலன் கிடைக்கவில்லை.

அதன்படி, ஒன்லைன் ஊடாக மேற்கொண்ட பரந்த விழிப்புணர்வுக்குப் பிறகு 200,000 250,000 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளோம். இவ்வாறாக பிரதேச செயலகங்களுக்கு நேரடியாக வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தற்போது எமது மென்பொருளில் உள்வாங்கப்படுகிறது. இதன்படி, இரண்டாம் கட்ட விண்ணப்பம் கோரல் 2024 மார்ச் 15ஆம் திகதியுடன் நிறைவடையும். விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்காத எவரும்அஸ்வெசும பலன்களைப் பெற தகுதி பெறமாட்டார்கள் என்பதை வலியுறுத்த வேண்டும்.

## தமிழ்நாடு உத்தரவாதம் தந்தால்...

உத்தரவாதத்தை தமிழ்நாட்டு மீன்வளத்துறை அமைச்சர் தருவாராயின், இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு தயாராக உள்ளதாகவும்,இதுவே பேச்சுக்கான அடிப்படை என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக இணக்கப்பாட்டுடன் பேச்சுவதற்கு தயாரென, தமிழ்நாட்டு மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனிடம் தாம்,தெரிவித்ததாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பயணம்செய்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதில், இலங்கை இந்தியா மீனவர்கள் பிரச்சினை தொடர்பிலான இரு நாட்டு அரசின் பேச்சுக்கள் தொடர்பில் முன்னேற்றம் ஏதும் இருக்கிறதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தார்.அமைச்சர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், என்னுடன் தமிழ்நாட்டு மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் தொலைபேசியில் பேசினார். இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணவேண்டும் என்றார். தமிழ்நாட்டு முதலமைச்சருடன் நேற்று முன்தினம் மாலை கலந்துரையாடுவதாகவும் அவரூடாக பாண்டிச்சேரி முதலமைச்சருடன் கலந்துரையாடுவதாகவும் எனக்கு அறிவித்தனர். என்னையும் அந்த கலந்துரையாடலுக்கு நிகழ்நிலையில் அல்லது தொலைபேசியில் கலந்து கொள்ள முடியுமா? என்றும் கேட்டனர். இதற்கும் நான் இணங்கியுள்ளேன். ஆனால், எனக்கு அவர்கள் உத்தரவாதம் தர வேண்டும். அவர்களின் இழுவை மடி படகுகள் எங்கள் கடலுக்குள் வந்து வளங்களை சுறண்டுகின்ற, அழிக்கின்ற ,எங்கள் கடற்தொழில் மக்களின் வாழ்வாதாரத்தை சீரழிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்ற உத்தரவாதம்,தமிழ்நாட்டிலிருந்து கிடைக்க வேண்டும். அவ்வாறு கிடைத்தால்,இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு தயாராக இருப்பதாக தாம்,தெரிவித்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## பாராட்டே சட்டம் இடைநிறுத்தம்...

ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர்கள் இதனை தெரிவித்தனர். அமைப்பின் இணைப்பாளர் திரு ராகவன், பணிப்பாளர் சசிகலா டி சில்வா ஆகியோர் இவ்வூடக மாநாட்டில் பங்கேற்று கருத்துக்களை தெரிவித்தனர்.

பாராட்டே சட்டம் இடைநிறுத்தப்பட்டதால் வர்த்தகர்கள் மகிழ்ச்சியுற்றுள்ளனர். நாட்டில் ஏற்பட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகளால் சிறிய மற்றும் நடுத்தர தொழிலாளர்களாகிய நாம், பாதிக்கப்பட்டோம். இத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு வீடுகள் மற்றும் சொத்துக்களை அடகு வைத்து வங்கிகளில் கடன்பெற்றோம்.எதிர்பாராமல் ஏற்பட்ட அசாதாரண சம்பவங்களால் (கொவிட்,ஈஸ்டர் தாக்குதல்) எமது தொழில்கள் பாதிக்கப்பட்டன. இதனால்,பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் எமக்கு எதிராக வங்கிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளன.

அத்துடன் சில வங்கிகள் எமது சொத்துக்களை மீளப்பெற்று அதனை விற்பதற்கும் முடிவு செய்துள்ளன . இவ்வங்கிகளுக்கு எதிராக நாங்கள் மேல்முறையீடு செய்துள்ளோம். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியும் எங்களது தொழில்கள் பாதிப்புறப் பங்களித்தன.

எனவே,கடன் வழங்கிய வங்கிகளிடமிருந்து சிறிது கால அவகாசத்தை பெற்றுத் தருமாறு நீதியமைச்சர், கைத்தொழில் அமைச்சரிடமிடமும் கோரிக்கை விடுத்தோம்.

## தோட்டதொழிலாளர் சம்பள உயர்வு...

வார்த்தையில்,சம்பள நிர்ணய சபை பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இ.தொ.கா தலைமையகமாக சௌமிய பவனில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. தேயிலை, இறப்பர் தொழிலாளர்கள் சார்பில் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் இது தொடர்பில் அமைச்சர் ஜீவனுடன் கலந்தாலோசித் தனர்.2024 முதல் மூன்றாண்டு காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் வரையில் இப்பிரதிநிதிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் , சம்பள நிர்ணய சபையில் கோரிக்கைகளை எவ்வாறு முன்வை ப்பதென,இச்சந்திப்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## ஜனாதிபதித் தேர்தல்: செப்.18அக் 18...

தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு, தேர்தல் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த ஆணைக் குழுவின் தலைவர் சமன்ஸ்ரீ ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சியினருக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வுகள் நேற்று முன்தினமும் (21) மற்றும் எதிர்வரும் மார்ச் (06) நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், (21) முதல் நிகழ்வில் நாற்பது அரசியல் கட்சிகள் பங்கு பற்றியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்துக்கமைய தேர்தல்களுக்கான நிதியை செலவிடுவது மட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, சிசிர ஜயகொடி, உவிந்து விஜேவீர உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்களை நடத்துவதற்கான நிதி தொடர்பான பிரச்சினை தற்பொழுதுநிவர்த்திசெய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## தோற்கடித்து அரசாங்கத்தின்...

நம்பிக்கையில்லாப் பிரேரணையை, உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளிநாட்டிலுள்ள போது, பொதுஜன பெரமுனவின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என அமைச்சரிடம் கேட்கப்பட்டது. இதற்கு பதிலளித்த அமைச்சர்,

கடந்த காலத்தில் வேலைப்பளுவாக இருந்ததால் அவர் வெளிநாடு சென்றார். அவர் விரைவில் இலங்கைக்கு திரும்புவார். இப்போதும் எமது அரசியல் வேலைத்திட்டம் கிராம மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பஷில் வரும் போதுகட்சியைபலப்படுத்தும்திட்டம் பரவலாக செயற்படுத்தப்படும்.

பொதுஜன பெரமுன ஜனாதிபதி தேர்தலுக்குத் தயாராகி வருகின்றதா? என கேட்கப்பட்ட கேள்விக்கு,

அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அண்மையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெளிவாகக் கூறியது.

இரண்டு வருடங்கள் இரண்டு தேசிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். நாட்டு மக்கள் முடிவெடுக்க இது சிறந்த வாய்ப்பு. அரசியலமைப்புக்கு முரணான வகையில் எந்த சந்தர்ப்பத்திலும் தேர்தலை ஒத்தி வைக்க மாட்டோம்.

முன் கூட்டியே தேர்தலை நடத்த முடியும். நாட்டு மக்கள் அதற்கேற்ப செயற்படுவார்கள்.

## தமிழரசு கட்சி மீதான வழக்கு:...

தெரிவித்த அவர், “திருகோணமலை மாவட்டத்தின் சார்பில் நாங்கள் தொடர்ந்த வழக்கு, கட்சியின் யாப்புக்காகவும், கட்சியில் திருத்தங்கள் செய்வதற்காகவுமே.

பிரச்சினை உள்ளதை ஏற்றுக் கொண்ட திருகோணமலை மாவட்ட மதத்தலைவர் இதை, சுமுகமாக முடிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.கட்சி யாப்பின் பிரகாரம் தவறுகளை திருத்தி சரிவரச் செய்வதாக உறுதியளித்தேன்.அங்கு வந்த சகலருக்கும் இது தெரியும்.

ஆனால்,இதுபற்றி சில நபர்களால் பொய்யான வதந்திகள் பரப்பப்படுகின்றன . சுமந்திரன் மற்றும் சாணக்கியனை கேட்டுத்தான் இதுபற்றிச் சொல்வதாக தாம்,கூறியதாகவும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால் அப்படியான சம்பவமொன்றும் நடக்கவில்லை. இதை சரியாக விசாரிக்க வேண்டுமானால் எங்கள் மூத்த தலைவர் சிவஞானம் ஐயாவுடன் வினவினால் அதற்குரிய பதிலை அவர் வழங்குவார்.

எமது கட்சிக்காகவே வழக்குத் தொடர்ந்தேனே தவிர யாரும் சொல்லி இந்த வழக்கை பதிவுச் செய்யவில்லை. கட்சியின் உறுப்பினர்களுக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்பதே எனது நோக்கம்.எனது நன்மைக்காக இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை” எனவும் அவர் தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

(00.00.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** கூட்டுத் தொழில் வியாபாரம் வாரத் தொடக்கத்தில் சுமாராக இருந்தாலும் பிற்பகுதியில் நல்ல முறையில் நடைபெறும். கலைஞர்கள் விடாமுயற்சியுடன் சில புதிய வாய்ப்புகளை பெறலாம்.

**ரிஷபம் :** கூட்டுத் தொழில் வியாபாரம் மந்தமாக நடைபெறும். வாரத்தின் பிற்பகுதியில் சற்று முன்னேற்றம் காணப்படும். இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் அமைவது சிரமம்.

**மிதுனம்:** வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்ள இரவு பகல் பாராமல் உழைப்பீர்கள். கூட்டுத் தொழில் வியாபாரம் நன்றாக நடைபெறும். புதிய தொழில் தொடங்குவது பற்றி ஆலோசிப்பீர்கள்.

**கடகம்:** கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு வியாபாரம் ஓரளவே திருப்திகரமாக அமையும். எந்த முடிவை எடுப்பதாக இருந்தாலும் கூட்டாளிகளுடன் கலந்து ஆலோசித்த பின்னரே எடுப்பது நல்லது.

**சிம்மம்:** கூட்டுத் தொழில் வியாபாரம் ஏற்றம் இறக்கமுமாக இருக்கும். எனவே வியாபாரத்தில் முழுமையான திருப்தியை அடைவது சிரமம் தான்.

**கன்னி:** கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு வியாபாரம் சுமாராக நடைபெறும். அதே நேரம் உங்களுக்கு வாடிக்கையாளர்கள் பெருக வாய்ப்பு உண்டு.

**துலாம்:** கூட்டுத் தொழில் வியாபாரம் ஓரளவு திருப்திகரமாக நடைபெறும். அதே நேரம் வாடிக்கையாளர்களிடம் அதிக பாக்கி சேராதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** சொந்தத் தொழிலில் சில காலத்திற்கு ஊதியத்தில் நிறைவை காண முடியாது. கூட்டத்தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் ஓரளவே நிறைவை காண்பார்கள்.

**தனுசு:** சொந்தத் தொழிலில் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக்கொள்ள ஓய்வின்றி உழைப்பீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் சிறப்பாக நடைபெறும்.

**மகரம்:** கூட்டுத் தொழில் வியாபாரத்தில் பெரிய லாபத்தை எதிர்பார்க்க இயலாது. கலைஞர்கள் நேரடி முயற்சிகள் மூலம் சில புதிய வாய்ப்புகளை பெறுவார்கள்.

**கும்பம்:** கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெறுவதில் தடங்கல்கள் போட்டிகள் இருக்கக்கூடும். பெண்கள் குடும்ப தேவைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**மீனம்:** கூட்டுத் தொழில் வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருக்கும் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் அமையும். வெளியூர் பயணங்களின் போது உணவுகளில் கட்டுப்பாடு தேவை.

## நாட்டின் கையிருப்பு...

சீன மக்கள் வங்கியின் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு கையிருப்பு பரிமாற்ற சலுகையுடன் பெற்றுக் கொள்ளப்பட்டமை உள்ளடங்குகிறது.

## ரொனி டி மெல் காலமானார்...

வயது 99. ரொனி டி மெல் இலங்கைக்கு சுதந்திர வர்த்தகப் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியதில் முன்னோடியாகவும் இவர் இருந்தார்.

## மின்சாரக் கட்டண திருத்தம்...

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 10 இலட்சத்துக்கும் அதிகமான மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அக்குழுவில் ஆராயப்பட்டுள்ளது.

அந்த வகையில் மின் கட்டண நிலுவைத் தொகையை தவணை முறையில் நுகர்வோரிடமிருந்து அறவிடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் அக்குழு பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு பரிந்துரைகளை முன் வைத்துள்ளது.

## ஆதாரங்கள் சேகரிக்கும் பொறிமுறை....

வருவதாகவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களை இலங்கை நிராகரித்துள்ளதென்பதை மீண்டும் வலியுறுத்திய அமைச்சர் அலிசப்ரி, இந்த தீர்மானங்கள் காரணமாக ஏற்படுத்தப்பட்ட ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையையும் நிராகரிப்பதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பொறிமுறைகள் ஆக்கபூர்வமற்றவை எதிர்மறையானவையெனவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

காசா எதிர்கொண்டுள்ள நெருக்கடி குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அணுகுமுறை, அதன் நம்பகத் தன்மைக்கான ஒரு அமில பரிசோதனையாக அமையுமெனவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

## இலங்கை வரவிருந்த சாந்தன் ...

நாட்டுக்கு வருவதற்கான அனுமதியை இந்திய மற்றும் இலங்கை அரசுகள் வழங்கியிருந்தன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்ட சாந்தன், நோய் காரணமாக விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

மகனை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு சாந்தனின் தாயார் மகேஸ்வரி உருக்கத்துடன் கடந்த ஆண்டு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், ஆயுள் தண்டனை பெற்று வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாந்தன், கடந்த 2022ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற அறிவுறுத்தலையடுத்து விடுவிக்கப்பட்டார்.

சாந்தன் வெளிநாட்டவர் என்பதால் திருச்சி சிறைச்சாலை வளாகத்திலுள்ள வெளிநாட்டவருக்கான சிறப்பு முகாமில் அவர் வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து திருச்சி அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதையடுத்து அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக சென்னை ராஜீவ் காந்தி அரச பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த போதே சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை அவர் உயிரிழந்துள்ளார்.

## நாட்டில் கடும் வெப்ப நிலை...

நடுப்பகுதி வரை தொடருமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், வெளிப்புற விளையாட்டுப் பயிற்சி அல்லது விளையாட்டு நிகழ்வுகளை தவிர்க்குமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்குமாறு மாகாண மற்றும் பிராந்திய கல்வி அதிகாரிகளுக்கு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் சுகாதார அமைச்சும் கல்வி அமைச்சும் பாடசாலைகளுக்கு வழங்கும் அறிவுறுத்தல்களுக்கமைய பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# "உறுமய" காணி உரிமை பெறுவதற்கு அவசர தொலைபேசி இலக்கம்

**1908 (Hotline) இலக்கம் அறிமுகம்**

"உறுமய" தேசிய வேலைத் திட்டத்தின் அபிலாஷைகளை நனவாக்கி, மக்கள் தமது காணியின் முழுமையான உரிமையை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்கும் நோக்கில் அதற்காக விண்ணப்பிப்பதற்கு அவசரத் தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தினமும் காலை 8.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஜனாதிபதி அலுவலகம், 'உறுமய தேசிய செயற்பாட்டு அலுவலகம்', 1908 என்ற அவசரத் தொலைபேசி இலக்கம் மற்றும் 0114 354600 / 0114 354601 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பொதுமக்கள் தமது கோரிக்கைகளைப் பதிவு செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

www.tinyurl.com/urumaya (டிஜிட்டல் விண்ணப்பப் படிவம்) படிவத்தைப் பூர்த்தி செய்தும் இதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நில மேம்பாட்டுக் கட்டளைச் சட்டத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதிப் பத்திரங்கள் / கொடுப்பனவுப் பத்திரங்கள் உள்ள அரசாங்கக் காணிகளை நிபந்தனைகளின்றி முழுமையான உரிமையை மக்களுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2024 வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட ஒரு தனித்துவமான முன்மொழிவாகும்.

இந்த "உறுமய" நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக முழுமையான உரிமையுடைய காணி உறுதிப்பத்திரங்களைப் பெறுவதன் மூலம், குறித்த காணிக்கு புதிய பெறுமதி கிடைப்பதுடன், அவர்களின் உரிமையைப் பாதுகாத்து அவர்களின் குடும்பத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் வாய்ப்பு உருவாகும்.

## தவக்கால சிந்தனை



# "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி."

இன்றைய நாளின் நற்செய்தியின் உவமையாகிய பணக்காரனும் ஏழை இலாசரும் குறித்து உலககெங்கும் பரந்து வாழ்கின்ற பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இயேசுவுடன் சண்டையிடுவார்கள் என்றே நான் கருதுகிறேன். தண்டனைத் தீர்ப்பினைப் பெற பணக்காரன், இலாசருக்கு எதிராக என்ன தீங்குசெய்தான்? அவன் அவரை சபிக்கவுமில்லை, சாபமிடவுமில்லை. தனது சொந்த வாழ்வின் நன்மைத் தனங்களை அனுபவிக்கும் போது,ஏழை மனிதனை மட்டும் புறக்கணித்தான்.

இருப்பினும்,மத்தேயு நற்செய்தியில் வருகின்ற இறுதித்தீர்வை குறித்த உவமையில் கடவுளின் மகன் தண்டனைத் தீர்ப்பு பெற்றவர்களிடம் கூறுவது யாதெனில்,"ஆமேன், நான் உங்களுக்குச் சொல்கிறேன். சின்னஞ்சிறிய இவர்களுக்கு செய்யாத போதெல்லாம் நீங்கள் எனக்கே செய்யவில்லை என்பதாகும். மோசேயின் சட்டம்:

"நீங்கள் ஒரு அந்நியரை ஒடுக்கவோ அல்லது துன்புறுத்தவோ கூடாது, ஏனென்றால் நீங்கள் எகிப்து தேசத்தில் அந்நியர்களாக இருந்தீர்கள்,"என்று கூறினாலும் புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் மட்டில் நடைபெறுகின்ற கொடூரமான விடயங்கள் பற்றி நாளாந்தம் அதிகம் கேட்கிறோம்.

நம்முடைய நல்லெண்ணத்திற்கும் ,பிறரன்புச் செயல்களுக்கும் இயேசு எந்தவிதமான வரம்பும் வைக்கவில்லை. அவரே சொல்கிறார்: "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி."நாம் மோசேக்கு செவிசாய்க்கவேண்டும், இன்னும் அதிகமாக சாவிலிருந்து உயிர்த்தெழுந்த இயேசுவிற்கு செவிசாய்க்க வேண்டும்.ஏரேமியா இறைவாக்கினரின் முறையீடானது: "மனித இதயம் அனைத்தையும் விட கடினமானது,திருத்தமுடியாதது, யார்தான் அதனைப் புரிந்து கொள்வார்கள்?"

இத்தவக்காலமானது நமது குறைகளையும் தவறுகளையும் கண்டு கொள்ளச் செய்வதோடு மட்டுமல்லாது,நமது இதயத்தை இயேசுவின் அன்பும், இரக்கமும் மிகுந்த இதயத்தில் வைக்கத் துணை புரியட்டும்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

அஸ்வெசும இரண்டாம் கட்டம்

# முதல் 12 நாட்களில் 30,000 விண்ணப்பங்கள் கையளிப்பு

அஸ்வெசும இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டு முதல் 12 நாட்களில் 30,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் (27) நடைபெற்ற செயலமர்வொன்றில் கலந்து கொண்டு தெரிவிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 02 மில்லியன் மக்கள் ஏற்கனவே நிவாரண உதவிகளை பெற்று வருவதாகவும், இரண்டாம் கட்டத்தின் கீழ், புதிய விண்ணப்பதாரர்களுடன் 2.4 மில்லியன் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே நோக்கமென்றும் அவர் கூறியுள்ளார்.

இரண்டாம் கட்ட விண்ணப்பம் ஆரம்பிக்கப்பட்ட பெப்ரவரி 15 முதல் 27 வரை சுமார் 30,000 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 8,750 விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், ஏனையவை இணையம் மூலம் நேரடியாக விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கிராம சேவகர்கள் நியமனம்:4232 பேருக்கு 13இல்,நேர்முக பரீட்சை

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாடளாவிய ரீதியில் நிலவும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 13 இல் நடத்தப்படவுள்ளது.இது தொடர்பில் நேற்று தெரிவித்த உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, எதிர்வரும் மார்ச் 13 முதல் மூன்று தினங்களுக்கு இந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்பட வுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 02 இல், நடத்தப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான பரீட்சைக்குத் தோற்றிய 4232 பேர், எதிர்வரும் 13 ஆம் திகதி இடம்பெறவுள்ள நேர்முகப் பரீட்சையில் பங்கேற்க வுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கிராம சேவை உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், நேற்றைய தினம் இடம் பெற்ற பேச்சுவார்த்தையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நேர்முகப் பரீட்சையில் தகைமையை உறுதிப்படுத்துபவர்களுக்கு மிக விரைவில் நியமனம் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# சுமந்திரனின் தாயாரின் இறுதிக் கிரியை நாளை

பொரளையில் நல்லடக்கம்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனின் தாயார் கிளாடிஸ் புஷ்பராணி மதியாபரணனின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (01) நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (27 ) காலமான அன்னாரின் பூதவுடல் பொரளையிலுள்ள ஏ,எப். ரேமண்ட் மலர்ச்சாலையில் இன்று (29) காலை 9.00 மணி முதல் இரவு 9.00 வரையும், நாளை மார்ச் (01) காலை 9.00 மணி முதல் மாலை 3.00 வரையிலும் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

நாளை மார்ச் (01) பி.ப 4.00 மணிக்கு ஏ.எப் மலர்ச்சாலையில் நல்லடக்க ஆராதனைகள் நடத்தப்பட்டு, அன்னாரின் பூதவுடல் பொரளை கனத்தை மாயானத்தில் மாலை 05 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் சிறுவர்களிடையே போஷாக்கின்மை அதிகரிப்பு

**குடும்ப சுகாதார பணியகம் எச்சரிக்கை !**

குடும்ப சுகாதார பணியகத்தின் தரவு அறிக்கைகளின்படி, 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், குழந்தைகளிடையே, இவ்வாண்டில் போஷாக்கின்மை உள்ளிட்ட ஊட்டச்சத்து குறைபாடுகள் அதிகரித்துள்ளதாக பணியகத்தின் அதிகாரி டொக்டர் சமல் சஞ்சீவ கூறுகின்றார்.

இந்த அறிக்கைகளின்படி, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிகளவான எடை குறைந்த குழந்தைகள் அல்லது உடல் ஊனமுற்ற சிறுவர்கள் பதிவாகியுள்ளனர். ஹம்பாந்தோட்டை உட்பட நாடளாவிய ரீதியில் இவ்வாறானதொரு நிலை காணப்படுவதாக, அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் கவனத்திற்கு வந்தாலும் எவரும் அதனை கருத்திற்கொள்ளவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குடும்ப சுகாதார பணியகத்தின் அறிக்கைகளின்படி, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் இறுதியில், குழந்தைகளின் உயரம் மற்றும் எடை குறைவு போன்ற ஊட்டச்சத்து நெருக்கடிகள் நாடு முழுவதும் காணப்படுகின்றன,

## மலைச்சாரல்

# மின்சார வேலியில் சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(தலவாக்கலை குறூப் நிருபர்)

தலவாக்கலை லிந்துலை ஹென்போல்ட் தோட்டத்தில் மரக்கறி தோட்டமொன்றில் சட்டவிரோதமாக போடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். ஹென்போல்ட் தோட்டத்தில் வசிக்கும் தோட்ட தொழிலாளியான மதுரைவீரன் நாகராஜ் (56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மரக்கறி தோட்டத்தில் பயிர்களை விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக போடப்பட்டிருந்த மின்சார வேலியின் வயர் அறுந்து கீழே வீழ்ந்துள்ளது. இதன்போதே அதை கடந்து செல்ல முற்பட்டவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நுவரெலியா நீதவான் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சாந்த பண்டார தலைமையில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சப்ரகமுவ மாகாணத்தில் முதலாம் தரத்துக்கு 30000 மாணவர்கள் அனுமதி

(இரத்தினபுரி சுழற்சி, பலாங்கொடை தினகரன் நிருபர்கள்)

சப்ரகமுவ மாகாணத்தின் 549 பாடசாலைகளிலும் முதலாம் தரத்துக்கு 29 ஆயிரத்து 580 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க மாகாணத்தின் மிகவும் கஷ்டப் பிரதேச பாடசாலையான நுவரெலியா மாவட்டத்திற்கு அண்மித்த தொடவத்த ஆரம்பப் பாடசாலைக்கு அண்மையில் விஜயம் செய்தார்.

மூடப்படும் நிலையிலிருந்த இப்பாடசாலையானது அதிபர் ஆசிரியர்களின் அயராத முயற்சியால் இவ்வருடம் 44 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனை அடையாளப்படுத்தும் வகையில் ஆசிரியர்களுக்கு அன்பளிப்புகளும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் இப்பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறை கட்டடமொன்றை வழங்க ஏற்பாடுசெய்யுமாறு ஆளுநர் அதி காரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

# இளைஞனை காணவில்லை

கந்தப்பளை ஹைபொரஸ்ட் குருந்து ஓயா தோட்டத்தில் வசிக்கும் உடப்புசல்லாவ அலகொல தோட்டத்தைச் சேர்ந்த துரைசாமி சங்கர் (வயது 37) என்பவரை கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் காணவில்லையென அவரது குடும்பஸ்தர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர். ஹைபொரஸ்ட் குருந்து ஓயா தோட்டத்திலிருந்தே அவர் காணாமல் போயுள்ளதாக அவரது வீட்டார் ஹைபொரஸ்ட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவரை தேடும் பணியில் ஹைபொரஸ்ட் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் இவர் தொடர்பில் தகவல் தெரிந்தோர் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு ஹைபொரஸ்ட் பொலிஸார் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் இவரை கண்டவர்கள் இவர் தொடர்பான தகவலை 0767135932, என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறும் குடும்பஸ்தர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(ஆ.ரமேஷ்)

சிறுவன் பாலியல் துஷ்பிரயோகம்;

# எதிரிக்கு ஏழு வருட கடூழியச் சிறை

வலப்பனை மத்துரட்ட பொலிஸ் பிரதேசத்தில் 14 வயது சிறுவன் ஒருவரை மூன்று முறை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நுவரெலியா மேல் நீதிமன்றம் 07 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பை நுவரெலியா மேல் நீதிமன்ற நீதவான் விராஜ் வீரசூரிய வழங்கியுள்ளார்.

HCR/05/2017 இலக்கம் கொண்ட இவ்வழக்கு 2017 ஆண்டு முதல் கடந்த ஏழு வருடங்களாக நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட வலப்பனை மத்துரட்ட பிரதேசத்தைச் சேர்ந்த மந்திலக்க திஸாநாயக்க 14 வயது சிறுவன் ஒருவரை மூன்று முறை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக இவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

அதற்கமைய இவ்வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டமையால் சந்தேகநபருக்கு ஏழு வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு 04 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும் இந்த தொகையை வழங்காத பட்சத்தில் மேலும் மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பு வழங்கினார். அதேநேரத்தில் நீதிமன்ற தண்டனை பணமாக 15 ஆயிரம் வழங்க வேண்டுமென அறிவித்த நீதிபதி இத்தொகையை செலுத்தாத பட்சத்தில் மேலும் மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

ஆ.ரமேஷ்

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலவச மருத்துவ பரிசோதனை முகாம்



(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் )

சர்வதேச மகளிர் தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகர் அலுவலகம் மத்திய மாகாண சபையுடன் இணைந்து மத்திய மாகாண சபையின் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை முகாமை ஏற்பாடு செய்தது.

மத்திய மாகாண ஆளுநர் கௌரவ திரு.லலித் யூ.கமகே, இந்திய உதவி உயர்ஸ்தானிகர் டொக்டர். ஆதிரா பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் திருமதி சரிதா இளங்ககோன் மற்றும் சிரேஷ்ட வைத்தியர்கள் ஆகியோர் இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# அயகம பிரதேசத்தில் கடும் வரட்சி

(பலாங்கொடை தினகரன் நிருபர்)



இரத்தினபுரி மாவட்டத்தில் அயகம பிரதேசத்தைச் சூழவுள்ள பகுதிகளில் கடும் வரட்சி காரணமாக கிணறுகள் மற்றும் நீர்நிலைகள் வற்றியுள்ளதால் இப்பிரதேசங்களில் பெரும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது.

நீர் தேடி அலைந்து திரியும் பன்றிகள், முள்ளம்பன்றிகளின் கழிவுகளால் நீர் அசுத்தமாகியுள்ளதுடன் குழாய் நீர்த்திட்டங்கள் செயலிழந்துள்ளது.

வரட்சி நிலைமை தொடர்ந்து நிலவும் பட்சத்தில் அயகம நகரத்திற்கு நீரினை வழங்குவது பெரும் பிரச்சினையாகும் என அயகம பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சீரற்ற காலநிலை காரணமாக நோய்களிலிருந்து பாதுகாப்பு பெற கொதித்தாறிய நீரை அருந்துமாறு அயகம சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் பொது மக்களை வேண்டியுள்ளது.



முன்னாள் ஹப்புத்தளை பிரதேச சபை தவிசாளர் பீ.கந்தசாமி கண்ணா பதுளை மாவட்ட மலையக சமூக அபிவிருத்தி அமைப்பாளராக மக்கள் சக்தி கட்சியின் தலைவரும் எதிர்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமன கடிதத்தை கையளிப்பதை படத்தில் காணலாம்.

(படம்.ஊவா சுழற்சி நிருபர்)

# பெறுகை அறிவித்தல்

# வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு மத்திய மாகாணம்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை
## முதலாம் கட்ட பெறுகைகள் கோரல் (திறந்த) - 2024

மத்திய மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பெறுகைக் குழுத் தவிசாளரினால் நிர்மாணம் மற்றும் பொருட்களை வழங்குவதற்காக நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதிகாரசபையில் (CIDA) வீதிகள் துறையில் செல்லுபடியாகும் பதிவு, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரப் பதிவைக் (கைத்தொழிலுக்கு இயைபாக) கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வித் தொகை 5 அல்லது 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைய பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

இதன் பிரகாரம் உங்கள் நிறுவனத்தினால் கேள்விகளைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்திருந்தால் இயைபுடைய கைத்தொழில் மற்றும் உங்களின் மின்னஞ்சல் முகவரியை சரியாகக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றை 2024-03-01ஆம் திகதி முதல் 2024-03-20ஆம் திகதிக்கு முன் prdatender@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது.

கேள்விப் படிவங்கள் வழங்கும் இறுதி நாள் 2024-03-21ஆம் திகதி பி.ப. 03.00 மணியாகும் என்பதுடன் ஏனைய முக்கிய தகவல்கள் பின்வருமாறாகும்.

1. உங்களால் விண்ணப்பிக்கப்படும் வேலைக்கு இயைபான தகவல்களை வேண்டுகோள் கடிதத்தில் சரியாகவும் தெளிவாகவும் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். தகவல்கள் சரியாக இல்லாவிட்டால் அறிவிக்கப்படாமலேயே உங்களது வேண்டுகோள் கடிதம் நிராகரிக்கப்படும்.
2. மின்னஞ்சல் மூலமான வேண்டுகோள் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளல் 2024-03-20ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் இத்தினத்திற்கு முன் வேண்டுகோள் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ள ஒப்பந்த நிறுவனங்களுக்கு மட்டும் 2024-03-01ஆம் திகதி முதல் 2024-03-21ஆம் திகதி வரையில் அலுவலக நேரங்களில் மட்டும் கேள்விப்படிவங்கள், கேள்விதாரரினால் வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.
3. 2024-03-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இல. 09, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி எனும் முகவரியில் இடம்பெறும்.
4. இயைபுடைய கேள்விப்படிவங்களின் மென் பிரதியை உங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் உங்களால் கேள்விப்படிவங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு வன் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும். உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கேள்விப்படிவத்தின் மென் பிரதியில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல பக்கங்களும் உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்படிவத்தின் மூலப் பிரதி மற்றும் நகல்பிரதி உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இணைப்பில் குறிப்பிட்டுள்ள வகையில் வேலைக்கு இயைபான தொடரிலக்கம் மற்றும் வேலையின் பெயரையும் மூலப் பிரதியா அல்லது நகல்பிரதியா என்பதை தெளிவாகவும் மற்றும் சரியாகவும் குறிப்பிடவும். முறையாகப் பூர்த்தி செய்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என வெவ்வேறு உறைகளிலிட்டு தலைவர், பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, 109, யட்டிநுவர வீதி, கண்டி எனும் முகவரிக்கு 2024-03-22ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது இக்காரியாலயத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கோ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
5. கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்த உடனடுத்து கண்டி, இல. 109, யட்டிநுவர வீதி எனும் முகவரியிலுள்ள வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சில் கேள்விகள் திறக்கப்படுமென்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளலாம்.
6. கேள்விப்படிவங்கள் வழங்கப்படுவதற்காக மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் எவ்விதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. தேவையான மேலதிக விபரங்களை கண்டி, போகம்பரை, இல. 09, எஹல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளரிடமிருந்து 081-2052279, 081-2204378 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் prdatender@gmail.com எனும் மின்னஞ்சலின் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் ஒப்பந்த நிறுவனத்தினால் 2023ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட வினைத்திறன் ஒப்பந்தங்களை வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்படும். மேலும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களைக் கையளிப்பதற்கு இயைபான சுற்றுநிருபங்களின் விதிமுறைகள் பெறுகை நடவடிக்கைகளுக்கு பிரயோகிக்கப்படும். அதேபோல் ஒரு ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தத்தை வழங்கமுடியுமா என்பது பற்றி பெறுகைக் குழு தீர்மானிக்கும்.

கேள்வி ஆவணங்களுடன் உங்களால் வழங்கப்படும் ஆவணங்களை சரியாகவும் மற்றும் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு அமைவாகவும் சமர்ப்பித்தல் உங்கள் பொறுப்பாகும் என்பதுடன் இயைபான தகவல்கள் சரியாகச் சமர்ப்பிக்கப்படாமை கேள்விகள் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம். மேலும் ஏதாவது ஒரு கேள்வியை அல்லது எல்லாக் கேள்விகளையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவின் தவிசாளருக்கு உண்டென்பதுடன், ஆகக் குறைந்த விலைமனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடும் இல்லை.

**தவிசாளர்,**
**பெறுகைக் குழு.**

**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும்**
**வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு,**
**109, யடிநுவர வீதி, கண்டி.**

| இல. | ஒப்பந்த இலக்கம் | விபரங்கள் | ICTAD பதிவு | அளவுப் பத்திரத்தின் பெறுமதி (ரூ. மில்.) | கேள்விப் பிணை முறி 120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்விப் பிணை ரொக்கப் பணமாக (ரூபா) | கேள்விப் பிணை வங்கிப் பிணையாக (ரூபா) |
| | | **மாகாண நிலையான அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித்திட்டம்** | | | | |
| | | **கண்டி மாவட்டம்** | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கண்டி** | | | | | | |
| 1 | CPC/PRDA/PSDG/K/KAN/2024/01 | கிரிமெட்டிய கலஹா வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் "U" வடிவிலான வடிகான் அமைத்தல் (0+000-1+000 Km) | C7,C6 & C5 | 22.26 | 111,500.00 | 223,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 2 | CPC/PRDA/PSDG/K/HAR/2024/01 | ஹிங்குல்வல பதிராஜ உடஹேன வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (2+600 - 3+640 Km) | C7,C6 & C5 | 23.35 | 117,000.00 | 234,000.00 |
| 3 | CPC/PRDA/PSDG/K/HAR/2024/02 | ரணவன பொலவெல வீதிக்கு கல்தார் இட்டு அபிவிருத்தி செய்தல் (0+000 - 3+ 100 Km) | C8,C7 & C6 | 6.76 | 34,000.00 | 68,000.00 |
| 4 | CPC/PRDA/PSDG/K/HAR/2024/03 | ஜம்புகஹபிட்டிய நவயாலதென்ன வீதிக்கு கல்தார் இட்டு அபிவிருத்தி செய்தல் (0+000-1+000 Km) | C8,C7 & C6 | 6.81 | 34,500.00 | 69,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - குண்டசாலை** | | | | | | |
| 5 | CPC/PRDA/PSDG/K/KUN/2024/01 | கப்பெல புதுஹுவ வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (0+000 - 1+000 Km) | C6,C5 & C4 | 25.27 | 126,500.00 | 253,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கம்பொல** | | | | | | |
| 6 | CPC/PRDA/PSDG/K/GAM/2024/01 | தொலோஸ்பாகே கந்தேகடே வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (0+000 - 0+ 100 Km) | C9,C8 & C7 | 2.22 | 11,500.00 | 23,000.00 |
| 7 | CPC/PRDA/PSDG/K/GAM/2024/02 | கெலியமபிட்டிய பழுஹுவ வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் (Ch 0+610 Km RHS) | C8,C7 & C6 | 9.01 | 45,500.00 | 91,000.00 |
| 8 | CPC/PRDA/PSDG/K/GAM/2024/03 | உடஹேனதென்ன வெடகேதெனிய வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்பை நிர்மாணித்தல் (4+000 - 5+400) Km | C6,C5 & C4 | 28.90 | 144,500.00 | 289,000.00 |
| | | **மாத்தளை மாவட்டம்** | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - மாத்தளை** | | | | | | |
| 9 | CPC/PRDA/PSDG/M/MAT/2024/01 | ஓவிலிகந்த அங்கும்புர வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (1+800 - 3+330 Km) | C6,C5 & C4 | 28.96 | 145,000.00 | 290,000.00 |
| 10 | CPC/PRDA/PSDG/M/MAT/2024/02 | செலகம ருசிகம வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (1+300-2+300) | C7,C6 & C5 | 24.19 | 121,000.00 | 242,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - நாஉல** | | | | | | |
| 11 | CPC/PRDA/PSDG/M/NAU/2024/01 | கண்டலம கும்புக்கந்தவல வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (9+165 - 10 + 673) | C6,C5 & C4 | 34.13 | 171,000.00 | 342,000.00 |
| 12 | CPC/PRDA/PSDG/M/NAU/2024/02 | கோனக்கஹவெல ஹெலம்பகஹவத்த வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் மதகை நிர்மாணித்தல் (3+540 - 4+ 548 Km) | C7,C6 & C5 | 20.80 | 104,500.00 | 209,000.00 |
| | | **நுவரெலியா மாவட்டம்** | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - திம்புல்ல** | | | | | | |
| 13 | CPC/PRDA/PSDG/N/DIM/2024/01 | திபர்டன் முருகதென்ன வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கொங்கிறீட் வடிகானை நிர்மாணித்தல் (15+910 - 17+200 Km) | C6,C5 & C4 | 32.00 | 160,500.00 | 321,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ராகல** | | | | | | |
| 14 | CPC/PRDA/PSDG/N/RAG/2024/01 | ராசிங்கொல்ல தெரிபஹே வீதியில் மதகை நிர்மாணித்தல் (Ch 2+969 Km) மற்றும் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (4+600 Km) | C7,C6 & C5 | 15.19 | 76,000.00 | 152,000.00 |
| 15 | CPC/PRDA/PSDG/N/RAG/2024/02 | வாவி மற்றும் சந்ததென்ன வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்பை நிர்மாணித்தல் ( 3+435 - 3+460 & 3+520 - 3+740 Km) | C7,C6 & C6 | 22.02 | 110,500.00 | 221,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ரிகில்லகஸ்கட** | | | | | | |
| 16 | CPC/PRDA/PSDG/N/RIK/2024/01 | மகுருப்ப லெமசூரிய வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (7+940 - 9+000 Km) | C7,C6 & C5 | 24.27 | 124,000.00 | 248,000.00 |
| 17 | CPC/PRDA/PSDG/N/RIK/2024/02 | இடம்பிட்டிய வெல்லகிரிய வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (0+000-1+170 Km) | C7,C6 & C5 | 19.03 | 95,500.00 | 191,000.00 |
| | | **வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம்** | | | | |
| | | **கண்டி மாவட்டம்** | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கண்டி** | | | | | | |
| 18 | CPC/PRDA/MAIN/K/KAN/2024/01 | உடபேராதனை வீதியில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் - 4/1 (0+444 Km) | C8,C7 & C6 | 9.86 | 49,500.00 | 99,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 19 | CPC/PRDA/MAIN/K/HAR/2024/01 | பூஜாபிட்டிய கரகஹபிட்டிய வீதியில் கல்தார் இட்டு அபிவிருத்தி செய்தல் (0+000 - 2+000 Km) | C9,C8 & C7 | 4.21 | 21,500.00 | 43,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - குண்டசாலை** | | | | | | |
| 20 | CPC/PRDA/MAIN/K/KUN/2024/01 | சிரிமல்வத்த மெனிக்ஹின்ன வீதியில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (Near5/1 Culvert RHS) | C8,C7 & C6 | 9.95 | 50,000.00 | 100,000.00 |
| 21 | CPC/PRDA/MAIN/K/KUN/2024/02 | மொரகஹமுல துனுவில வெடருவ வீதியில் 2ஆம் தடவை தார் இடுதல் மற்றும் கட்டமைப்பை நிர்மாணித்தல் (7+000) | C6,C5 & C4 | 25.48 | 127,500.00 | 255,000.00 |
| 22 | CPC/PRDA/MAIN/K/KUN/2024/03 | குண்டசாலை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவிற்கு பராமரிப்பு வேலைகளுக்கான பொருட்களை வழங்குதல் | C8,C7 & C6 | 6.38 | 32,000.00 | 64,000.00 |
| 23 | CPC/PRDA/MAIN/K/KUN/2024/04 | வலல ஏ ரத்நாயக்க வித்தியாலயத்தில் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு அஸ்போல்ட் வழங்குதல் | அஸ்போல்ட் விநியோகிப்பதற்கான வியாபாரப் பதிவு | 2.26 | 11,500.00 | 23,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கம்பொல** | | | | | | |
| 24 | CPC/PRDA/MAIN/K/GAM/2024/01 | ஒலிகொட பிட்டவலவத்த வீதிக்கு கல்தார் இட்டு அபிவிருத்தி செய்தல் (1+027-1+890 Km) | C8,C7 & C6 | 9.84 | 49,500.00 | 99,000.00 |
| 25 | CPC/PRDA/MAIN/K/GAM/2024/02 | கம்பொல நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் ஹிந்தவல மற்றும் உடஹேனதென்ன முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C8,C7 & C6 | 5.36 | 27,000.00 | 54,000.00 |
| | | **மாத்தளை மாவட்டம்** | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - மாத்தளை** | | | | | | |
| 26 | CPC/PRDA/MAIN/M/MAT/2024/01 | திக்கும்புர மடகும்புர வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் (1+300 Km) | C8,C7 & C6 | 7.65 | 38,500.00 | 77,000.00 |
| 27 | CPC/PRDA/MAIN/M/MAT/2024/02 | டன்கன் ஹைவோல்டன் மாதலபிட்டிய வீதியில் மதகை நிர்மாணித்தல் (0+400 Km) | C9 & C8 | 0.75 | 4,000.00 | 8,000.00 |
| 28 | CPC/PRDA/MAIN/M/MAT/2024/03 | டன்கன் ஹைவோல்டன் மாதலபிட்டிய வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் (6+000 Km) | C9,C8 & C7 | 4.67 | 23,500.00 | 47,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - நாஉல** | | | | | | |
| 29 | CPC/PRDA/MAIN/M/NAU/2024/01 | Asphalt Laying of Illukkumbura Mahalakotuwa Road (From Ch 0+000-1+000 Km) | C7,C6 & C5 | 19.54 | 98,000.00 | 196,000.00 |
| | | **நுவரெலியா மாவட்டம்** | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ராகல** | | | | | | |
| 30 | CPC/PRDA/MAIN/N/RAG/2024/02 | உடபுஸ்ஸல்லாவ நில்தண்டாஹின்ன வத்துமுல்ல வீதியில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (Culvert - 20/1) | C8,C7 & C6 | 9.19 | 46,000.00 | 92,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - திம்புல்ல** | | | | | | |
| 31 | CPC/PRDA/MAIN/N/DIM/2024/01 | நோர்டன் ஹோமாகம வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (6+040-6+865 Km) | C7,C6 & C5 | 15.70 | 79,000.00 | 158,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ரிகில்லகஸ்கட** | | | | | | |
| 32 | CPC/PRDA/MAIN/N/RIK/2024/01 | ரிகில்லகஸ்கட உடமகுருப்ப வீதியில் பக்கச் சுவர் மற்றும் கான் மற்றும் வீதி வரம்புகளை அமைத்தல் (2/3 1+508 Km) | C8,C7 & C6 | 8.26 | 41,500.00 | 83,000.00 |
| 33 | CPC/PRDA/MAIN/N/RIK/2024/02 | ரிகில்லகஸ்கட நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலக முற்றவெளிக்கு மற்றும் பதியபெல்ல முற்றவெளிக்கு பொருட்களை வழங்குதல் | C9 & C8 | 0.28 | 1,500.00 | 3,000.00 |
| | | **தார் வழங்குதல்** | | | | |
| 34 | CPC/PRDA/PSDG/TAR/2024/01 | 2023ஆம் வருடத்தின் PSDG வீதி நிர்மாண வேலைகளுக்காக தார் மற்றும் திரவத் தார் வழங்குதல் (Bitumen & Emulsion CRS 1) | தார் மற்றும் திரவத் தார் வழங்குவதற்கான வியாபாரப் பதிவு | 5.52 | 28,000.00 | 56,000.00 |
| 35 | CPC/PRDA/PSDG/TAR/2024/02 | 2024ஆம் வருடத்தின் "ஞனு வீதி நிர்மாண வேலைகளுக்காக தார் மற்றும் திரவத் தார் வழங்குதல் (Bitumen & Emulsion CSS1 & CRS-1) | தார் மற்றும் திரவத் தார் வழங்குவதற்கான வியாபாரப் பதிவு | 5.56 | 28,000.00 | 56,000.00 |
| 36 | CPC/PRDA/MAIN/TAR/2024/01 | வீதி பராமரிப்பு வேலைகளுக்காக தார் மற்றும் திரவத் தார் வழங்குதல் (Bitumen & Emulsion CRS 1) | தார் மற்றும் திரவத் தார் வழங்குவதற்கான வியாபாரப் பதிவு | 18.27 | 91,500.00 | 183,000.00 |
| | | **ஏனையவை** | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கண்டி** | | | | | | |
| 37 | CPC/PRDA/OTHER/K/KAN/2024/01 | ரஜபிஹில்ல மாவத்தையில் தரைக்கீழ் மின்சார கேபிள்களை பதிப்பதன் பின் வீதியில் அகழப்பட்ட இடத்தை மீண்டும் வழமைக்கு கொண்டு வர அஸ்போல்ட் வழங்குதல் | அஸ்போல்ட் வழங்குவதற்கான வியாபாரப் பதிவு | 9.97 | 50,000.00 | 100,000.00 |

# மக்கள் சேவைகளுக்கே முன்னுரிமை அதன் பின்னரே மக்களை நாடுவேன்



சமூக சேவையாளர் எஸ். நிரோஷ்குமார்

வடக்கில் தற்பொழுது அபிவிருத்தியே முக்கியமான தேவையாகவுள்ளது.குறிப்பாக வடமாகாணத்திலுள்ள இளைஞர், யுவதிகள் அபிவிருத்தியை நோக்கியும் தங்களது எதிர்காலத்தை அடைந்து கொள்வதிலும் கரிசனை காட்டி வருகின்றனர்.

அந்தவகையில் வடக்கில் வாழும் மக்களுக்கு தேவையான அடிப்படை அபிவிருத்திகளை அவர்களிடத்தில் கொண்டு சேர்ப்பதை நோக்காகக் கொண்டுசெயற்படு ஒரு சமூக சேவையாளரான எஸ். நிரோஷ்குமார், தான் எதிர்காலத்தில் முன்னெடுக்க திட்டமிட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தினகரனுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.....

***கேள்வி : சமூக சேவைகளை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தை வழிநடத்துவது என்பது மிகவும் கடினமான விடயம். அதற்கு பாரிய பங்களிப்பு அவசியம். குறிப்பாக பொருளாதார ரீதியிலான பாரிய பலம் அவசியம். அதிலும் நீங்கள் நீண்டகாலமாக இந்த சமூக சேவைகளை செய்து வருகிறீர்கள். அது பற்றிய உங்கள் கருத்துகள் என்ன?***

பதில் : 10 வருடங்களுக்கு மேல் நான் சமூக சேவையில் ஈடுபட்டு வருகின்றேன். ‘சாந்திகுமார் அறக்கட்டளை’ என்ற என் தந்தையின் பெயரிலேயே இதை செய்து வருகிறேன். வவுனியாவில் பிறந்த நான் இரண்டாம் ஆண்டு வரையே கல்வி கற்றேன். அதன் பின்னர் யுத்தம் காரணமாக கொழும்புக்கு இடம்பெயர்ந்து எனது கல்வி நடவடிக்கைகளை கொழும்பு ரோயல் கல்லூரியில் ஆரம்பித்தேன்.

பட்டப்படிப்பை லண்டனில் முடித்துக் கொண்டு என் சொந்த ஊருக்குத் திரும்பிய போது, யுத்தம் முடிந்திருந்தாலும் எங்கள் ஊர் எந்தவித அபிவிருத்தியுமின்றி அதே மாதிரியாகத்தான் காணப்பட்டது. அடிப்படைத் தேவைகள் கூட இன்றி எங்கள் ஊர் இருந்தது. இதை மனதில் வைத்தே நான் என் கல்வி மூலமாகவும் விளையாட்டுத்துறை மூலமாகவும் உதவிகளை செய்து வருகின்றேன்.

***கேள்வி : ‘சாந்திகுமார் அறக்கட்டளை’ எப்போது ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஆரம்பிக்க காரணமான விடயங்கள் என்ன?***

பதில் : 2016 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த அறக்கட்டளை, மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக எங்களால் முடிந்தளவு உதவிகளை செய்ய வேண்டும் என்பதற்காக குடும்பங்களினூடாக பெற்ற சிறிய நிதியுதவியை வைத்து அறக்கட்டளையை ஆரம்பித்தேன். தற்போது இந்த அறக்கட்டளையை பெரிய அளவுக்கு எடுத்துச் சென்றுள்ளேன். இதில் முதலாவதாக மக்களுக்கு தேவையான கல்வி வசதிகளை செய்து கொடுத்தோம். பாடசாலைகளுக்கு தேவையான சேவைகள், கல்வி கற்றல் உபகரணங்கள், பாடசாலை விளையாட்டுத் துறைகள், சுகாதாரத் துறையிலும் பல சேவைகளை செய்து வருகின்றோம். அத்துடன் சுய தொழில் வாய்ப்புகளையும் அறிமுகப்படுத்தவுள்ளோம். இதற்காக பாரிய கைத்தொழிற்சாலையொன்றையும் அமைத்துள்ளோம். அதனூடாகவும் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கவுள்ளோம்.

***கேள்வி : நீங்கள் செய்துவரும் சமூக சேவைகளில் பாரியளவு திட்டமாக எதனைக் குறிப்பிடுவீர்கள்?***

பதில் : பாடசாலை மாணவர்களுக்கு பைகளை வழங்குவதில் இருந்து தற்போது தொழிற்சாலையொன்றை நிறுவி அதில் 30 பேருக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம். எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை 200 ஆக வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

***கேள்வி : தற்சமயம் உங்கள் சமூக சேவைகளினால் பயனடைந்தவர்கள் எத்தனை பேர் என அண்ணளவாக குறிப்பிட முடியுமா?***

பதில் : எண்ணிக்கை அடிப்படையில் கூறமுடியாது. குறிப்பிட்டு சொல்வதானால் வவுனியாவில் 150 – 200 கிராமங்களுக்கு சேவைகளை செய்துள்ளோம். அண்ணளவாக இரண்டாயிரம் தொடக்கம் மூவாயிரம் குடும்பங்களுக்கு உதவிகளை செய்து வருகின்றோம். இனிவரும் காலங்களில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்றே நினைக்கின்றேன்.

***கேள்வி : வவுனியாவை அடிப்படையாகக் கொண்டு சேவை செய்து வரும் நீங்கள் வட மாகாணத்துக்கும் உங்கள் சமூக சேவைகள் சென்றடைய திட்டங்கள் ஏதும் உள்ளனவா?***

பதில் : ஆம் நிச்சயமாக, வட மாகாணத்திலும் சேவைகளை விஸ்தரிக்க இருக்கிறோம். தற்போது மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் எங்கள் சேவைகளை விஸ்தரித்து வருகின்றோம்.

‘சாந்திகுமார் அறக்கட்டளை’ யை என் தந்தையின் பெயரிலேயே ஆரம்பித்தேன். வீழ்ந்து கிடக்கும் என் மக்களின் பொருளாதாரத்தை, வாழ்வாதாரத்தை, கல்வித்துறையை கட்டியெழுப்புவதே எனது நோக்கம்..



***கேள்வி : நீங்கள் அமைத்த பாரிய தொழிற்சாலையின் முதலீடுகள், அதன் பணியாளர்கள், அத்துடன் அத்தொழிற்சாலை தற்போது எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது பற்றி கூறுங்கள்?***

பதில் : வட மாகாணத்தில் விவசாயம் பாரிய அளவில் மேற்கொள்ளப்படுவதால், யூரியா உரப் பைகளுக்கான ஒரு தொழிற்சாலை உருவாக்கியுள்ளோம். தற்போது அங்கு 30 தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். வடக்கில் இவ்வாறான ஒரு தொழிற்சாலையை நாங்கள் தான் முதன் முதலில் நிறுவியுள்ளோம்.

***கேள்வி : உங்கள் சமூக சேவைப் பணிகளில் நீங்கள் எதிர்நோக்கிய தடங்கல்கள் யாவை?***

பதில் : பல தடைகள் வந்தன. ஒருவன் முன்னேறுவது இன்னொருவருக்கு பிடிப்பதில்லை. ஒருவரை தட்டிக் கொடுத்து வாழ்த்தி அனுப்புபவர்கள் அரிது. எங்களுக்கும் நிறைய தடைகள் வந்தன.எங்கள் தொழிற்சாலையை திறக்க விடாமல் பலர் முட்டுக்கட்டைகளையிட்டனர். இதனால் 02 வருடங்கள் தாமதித்தே ஆரம்பிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இவ்வாறான தடைகளை முறியடித்தே நான் ஒரு வெற்றியாளனாகியுள்ளேன். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. அத்துடன் முன்னேறிச் சென்று, மக்களுக்கான சேவையை எந்தத் தடைகள் வந்தாலும் தொடர்ந்து மேற்கொள்வோம் எனக் கூறிக் கொள்கிறேன்.

***கேள்வி :சமூக சேவையின் அடுத்த கட்டம் அரசியல். சமூக சேவை செய்யும் மனப்பான்மை கொண்டவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக முன்வந்து மக்களுக்கு சேவைகளை செய்வதற்கான ஒரு விடயமே இந்த அரசியல். மக்களின் தேவைகளுக்கான அடுத்த கட்டமாக ஏன் நீங்கள் அரசியலுக்கு வரக்கூடாது?***

பதில் : அரசியல் தற்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் ஐக்கிய மக்கள் சக்தியில் வவுனியா அமைப்பாளராக கடமையாற்றுகின்றேன். அரசியல்வாதிகள் அரசியலுக்கு வருவது சமூக சேவை. நம் நாடு எந்த நிலையில் இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. மக்கள் ஆணையும் ஆதரவும் இருந்தால் நான் நிச்சயமாக அரசியலில் ஈடுபடுவேன்.

***கேள்வி : உங்களுக்கு அரசியலில் ஈடுபடும் ஆர்வத்தைத் தூண்டியது உங்கள் தந்தை சாந்திகுமாரின் அரசியலில் ஈடுபாடா? அல்லது தனிப்பட்ட ரீதியாக மக்களுக்கு சமூக சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வமா?***

பதில் : என்னுடைய தந்தை 1970 – 80 களில் யாழ்.நகர சபை உறுப்பினராக இருந்தார். காங்கிரஸ் கட்சியின் தலைவராக குமார் பொன்னம்பலமும் என் தந்தையாரும் தான் அதை ஆரம்பித்திருந்தனர். என் பாட்டனார் துரைராஜா யாழ்ப்பாண மேயராக இருந்தார். என் அம்மாவின் பிறப்பிடம் ஓமந்தை வவுனியா. எனது அம்மாவின் தகப்பனார் Chairman சிதம்பரம்பிள்ளை உடையார், ஓமந்தையில் 60 களில் கடமையாற்றி இருந்தார். என் அத்தை திருமதி புலேந்திரன், 1989 – 94 வரை கல்வி இராஜாங்க அமைச்சராக பாராளுமன்றத்தில் இருந்தார். அவருடன் நான் முதன் முதலாக பாராளுமன்றம் போகும்போது எனது வயது 08. என் பரம்பரையில் அரசியல் சாயல் இருந்தது. ஆயினும் அரசியலுக்கு அப்பால் என் மக்களுக்கு சமூக சேவை செய்ய வேண்டுமென்ற ஆவல் என்னுள் இருந்தது. என்றாலும் என் கல்வியை முடித்த பின்னர், மக்களுக்கு சமூக சேவை செய்து, மக்கள் என்னை ஆதரித்து கேட்டுக்கொண்டால் அரசியலில் ஈடுபடுவேன். கஷ்டப்படும் மக்களுக்கு என் சேவைகளை கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் இருந்தது. ஒரு சமூக சேவையாளனாகவே நான் என்னை மக்கள் முன் அடையாளப்படுத்தியுள்ளேன்.

***கேள்வி : அரசியலில் ஈடுபட சந்தர்ப்பம் கிடைத்தால் நீங்கள் உங்கள் கடமைகளை சீராக நிறைவேற்றுவீர்களா? அல்லது மற்ற அரசியல்வாதிகளைப் போல் கடமையை தவறவிடுவீர்களா?***

பதில் : நான் சற்று வித்தியாசமானவன். நான் என் மக்களுக்கு சொல்வதை செய்து காட்டியுள்ளேன். அதேபோல் என் தலைவர் சஜித் பிரேமதாசவும் நான் கேட்பவற்றை என் மக்களுக்கு செய்து கொடுத்துள்ளார். செயலில் ஈடுபடாமல் பொய்யான பிரசாரங்களை கூறுவதுமில்லை, செய்வதுமில்லை. மக்களுக்கு எப்போதும் வெற்று வாக்குறுதிகளை வழங்கியதில்லை. மக்களுக்கு சேவைகளை செய்வதிலேயே முன்னுரிமை அளிப்போம். அதன் பிறகே மக்களை நாடிச் செல்வோம்.

படம் – ருக்மல் கமகே

நேர்காணல் : றிஸ்வான் சேகு முகைதீன்


## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்**

**கேள்வி அறிவித்தல்**

**காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் இடப்பரப்பை சுத்தம் செய்தல், இரும்பு, ஏனைய உருக்கு பொருட்கள், விறகு ஆகியவற்றை சேகரித்தல்**

**கேள்வி இல.: MOF/SLCC/BID/2024-1**

மேற்குறிப்பிட்டுள்ள கேள்வி ஒப்பந்தத்திற்கு அமைந்தொழுகும் தன்மையில் அதனிலுள்ள எந்தவொரு பாதிப்பையும் சீராக்கி அவ்வேலையை நிறைவேற்றி பூர்த்தி செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

**வேலைகளின் நோக்கம் பின்வருமாறு :**

1. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் (ஏறத்தாழ 200 ஏக்கர்கள் சுத்தப்படுத்தல் பிரதேசம்) காட்டு பிரதேச ஆரம்ப மற்றும் இரண்டாவதான கட்ட காட்டு பிரதேசத்தை சுத்தம் செய்தல்.
2. கட்டிடங்களின் உள்ளகத்தில் நிறுவப்பட்டுள்ளவற்றை தவிர்ந்த தற்போதுள்ள பாவிக்கக்கூடிய உருக்கு கூறுகளை சேகரித்து குவித்து வைத்தலுடன் தொழில் வழங்குநரின் பணிப்புரைகள் (சீவல்துண்டு மீள்சுழற்சி கைத்தொழில்கள் நியமங்கள்) ஆகியவற்றின் பிரகாரம்.

2024.02.29 ஆம் திகதியிலிருந்து 2024.03.21 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 ரூபாவை + பெசேவ (18%) செலுத்திய பின்னர், கொழும்பு-02, வொக்ஷால் தெரு, வொக்ஷால் மாளிகை, 27 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். தள விஜயங்கள் 2024 மார்ச் 12 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு திட்டமிடப்பட்டுள்ளது. தளத்திற்கு விஜயம் செய்யும் ஆகுசெலவுகள் விலைமனுதாரரினாலேயே பொறுப்பேற்றல் வேண்டும்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இடப்பரப்பில் பி.ப. 2 மணிக்கு திட்டமிடப்பட்டுள்ள தள விஜயத்தின் அதே நாளில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றும் நடைபெறும்.

பாதுகாப்பு நெறிமுறைகளுக்கு அமைந்தொழுகும் வகையில் இந்த செயற்றிட்டத்திற்கான தளமானது உயர்தடைவிதித்துள்ள பிரதேசத்தில் இலங்கை தரைப்படையின் கண்காணித்தலின் கீழ் அமைந்துள்ளது. விலைமனு முன்னோடிக் கூட்டம் மற்றும் தள விஜயத்திற்கான அணுகுவழியை உறுதிப்படுத்துவதற்காக பங்குபற்றுபவர்கள் அவர்களின் பெயர்கள், அடையாள அட்டை இலக்கங்கள் மற்றும் வாகன இலக்கங்களை 2024 மார்ச் 08 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பித்தல் வேண்டும்.

தேவைப்படுத்தப்பட்ட அனைத்து தகவல் அடங்கியுள்ள முத்திரை பொறியிடப்பட்ட உங்கள் விலைமனுவானது 2024.03.21 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பி.ப. 3 மணிக்கு பிந்தாமல் கிடைக்கும் வகையில் பின்வருமாறு ஒப்படைக்கப்படல் வேண்டும். (i) நேரடியாக ஒப்படைத்தல் அல்லது (ii) பதிவுத் தபாலில் நிதிப் பிரிவு, மேல் தரை மாடி, புதிய கட்டிடம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனு ஆவணத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “TENDER No.: MOF/SLCC/BID/2024-I” என்ற சொற்கள் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் 2024.03.21 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு மேலேயுள்ள இடத்தில் கேள்வியானது திறக்கப்படும். உரித்தான விலைமனுதாரர் அல்லது அவரது (ஆண்/பெண்) சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனு திறத்தலில் பங்குபற்றலாம்.

மேலதிக விபரங்களுக்கு, 0112440205/0112440203 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன கணக்காளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் தொடர்பான இறுதித் தீர்மானமானது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்வி குழுவிற்கே உரித்தானது.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விக் குழு,**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,**
**செயலகம்,**
**கொழும்பு-01.**



## A Great Opportunity to Own a Land Lot from Historical Kingdom of Kotte (Capital City)

**Invitation to Tender for Sale of**
**16 Valuable Home Plots 16**
**09th Lane, Ethul Kotte**

A limited opportunity only for 16 valued

Crown Title






- 3 Phase Electricity
- Pipe Borne Water

Tender documents could be collected from Deputy General Manager (Supplies) of this Corporation on a payment of non- refundable fee of Rs.6,000/= in cash between 9.00 a.m. and 3.30 p.m. on any working day from 20/02/2024 – 25/03/2024.

Separate Tender Documents should be obtained for each Lot. Sealed tenders indicating **Procurement No. S/125/24 “Sale of Lands at 09th Lane, Ethul Kotte”** on top left hand corner of the envelope should be sent to reach the address Chairman, Procurement Committee, Sri Lanka Land Development Corporation, No. 03, Sri Jayewardenepura Mawatha, Welikada, Rajagiriya under registered post or be deposited in the Tender Box made available at the Supplies Division of this Corporation before 1.30 p.m. on 27/03/2024.

**Further details could be obtained from the Deputy General Manager (Lands & Marketing)**
**Contact Nos.: 011-2862152, 011-2867369 Ext. 308, 071-7402772**
**www.landdevelopment.lk**

**Chairman**
**Sri Lanka Land Development Corporation**
**No. 03, Sri Jayawardenapura Mawatha**
**Welikada, Rajagiriya.**

**Ministry of Urban Development & Housing**

# அமரர் D.R. விஜேவர்தனவின் 138ஆவது பிறந்த தின ஆத்ம சாந்திப் பூஜை

















லேக் ஹவுஸ் இந்து மன்றம் நடத்திய, லேக்ஹவுஸ் ஸ்தாபகர் அமரர் D.R. விஜேவர்தனவின் 138ஆவது பிறந்த தின ஆத்ம சாந்திப்பூஜை கப்பித்தாவத்தை கைலாசநாதர் ஆலயத்தில் நேற்று நடைபெற்றது. பூஜை வழிபாடுகளில் லேக் ஹவுஸ் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், ஆசிரியபீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, சட்டம் மற்றும் நிர்வாக பணிப்பாளர் ஜனக ரணதுங்க, தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், லேக்ஹவுஸ் பௌத்த சங்கத் தலைவர் பிரியந்த விஜேசூரிய மற்றும் தினகரன் ஆசிரியர் பீடத்தினரும் லேக் ஹவுஸ் இந்துமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து லேக் ஹவுஸில் வைக்கப்பட்டிருக்கும் அமரர் D.R. விஜேவர்தனவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (படங்கள்: சுலோச்சன கமகே)





யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் எம்.பியின் தாயார் நேற்று முன்தினம் (27) காலமானார். கொழும்பில் வைக்கப்பட்டுள்ள அன்னாரின் பூதவுடலுக்கு நேற்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இறுதி மரியாதை செலுத்துவதைப்படத்தில் காணலாம்.

# அந்நிய ஆதிக்கத்திலிருந்து நாட்டை பாதுகாக்க முஸ்லிம்கள் அர்ப்பணிப்பு செய்திருக்கிறார்கள்

## கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் அஷ்ஷெய்க் பளீல்




இலங்கை முஸ்லிம்கள் இந்த நாட்டுக்கு பொருளாதார, அரசியல் ரீதியாக பங்களிப்பு செய்திருக்கிறார்கள். இந்த நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து பாதுகாப்பதற்காக உயிர்த் தியாகங்களையும் செய்திருக்கிறார்கள். பாதுகாப்பு படையில் இருந்திருக்கிறார்கள். அரசர்களோடும் சிங்கள மக்களோடும் அவர்கள் நெருக்கமான உறவை கொண்டிருந்ததனால் தான் காலனித்துவவாதிகளது குறிப்பாக போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர்கள் ஆகியோரது எதிர்ப்புகளை அவர்கள் சம்பாதிக்க நேரிட்டதென ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் அதன் இஸ்லாமிய கற்கைகள் பீட பீடாதிபதியுமான அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல் (நளீமி) தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு சூரா சபை கொழும்பில் கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்திருந்தது. சபையின் தலைவர் சட்டத்தரணி ரீ.கே.அஸூர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அஷ்ஷெய்க் பளீல்;

இந்த நாட்டின் தேசியக் கொடியில் நான்கு இனங்களது நிறங்களும் உள்ளன. தேசிய கீதத்தில் 'நாம் அனைவரும் ஒரே தாயின் பிள்ளைகள்' என்று கூறப்படுகிறது. ஆனாலும் இன்னும் இனவாதம், அரசியல் அராஜகம், பொருளாதார சுரண்டல் என்பன இருந்து வருகின்றன. 30 வருட யுத்தத்தையும் , இரு தடவைகள் இளைஞர்களது கிளர்ச்சிகளையும் இனக் கலவரங்களையும் இந்த நாடு சந்தித்திருக்கிறது. தற்போது மக்கள் பொருளாதார ரீதியாக பயங்கரமான சவால்களை எதிர்நோக்கி வருகிறார்கள். மூளைசாலிகள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

நிலை இப்படியிருக்க நாம் எப்படி சுதந்திரம் பெற்றதாகக் குறிப்பிட முடியும்? பரஸ்பர புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, நாட்டுப்பற்று, தியாகம் இன நல்லிணக்கம் என்பன உடனடியான தேவைகளாக இருக்கின்றன. இவற்றை நாம் அடைந்தால் மாத்திரமே சுதந்திரக் காற்றை சுவாசித்தவர்களாக கருதப்படுவோம்" என்றும் குறிப்பிட்ட அஷ்ஷைக் பளீல் அவர்கள், தேசிய சூரா சபை உருவாக்கப்பட்டிருப்பது பயங்கரவாதம், தீவிரவாதம் என்பவற்றிலிருந்து நாட்டைப் பாதுகாப்பது, தேசத்தை கட்டியெழுப்புவது, நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றைக் காண்பது, இன நல்லிணக்கம் போன்ற நோக்கங்களாகும்" என்றும் குறிப்பிட்டார். தேசிய சூரா சபையின் மேற்படி நிகழ்வில் முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாத சமூகங்களை சேர்ந்த புத்திஜீவிகள் சமூக நலன் விரும்பிகள் சமூக செயற்பாட்டாளர்கள் போன்றோர் கலந்து சிறப்பித்தனர்.

# கொழும்பில் குவைத் தேசிய தின நிகழ்வுகள்









குவைத் தேசிய தின நிகழ்வுகள் (26) கொழும்பில் நடைபெற்றது. இலங்கையின் குவைத் தூதுவர் கலப் எம் அல் புதைர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் கலந்துகொண்ட அல் ஹிமா அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ், அதன் திட்டப்பணிப்பாளர் சகீப் அர்ஸலான் ஆகியோர் தூதுவருடன் உரையாடுவதைப்படங்களில் காணலாம்.
படம் : அஷ்ரப் ஏ சமட்

# ரிதிமாலியத்த பிரதேசத்தில் வர்த்தகவள மையக் கட்டடம்

ஊவா மாகாணசபையின் பிராந்திய அபிவிருத்தி ஆதரவு திட்டத்தின் (LDSP) நிதியுதவியின் கீழ் 26 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய வர்த்தகவள மையக் கட்டடம் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் மற்றும் இராஜாங்க அமைச்சர் தெனுகா விதானகமகே ஆகியோரினால் மக்கள் பாவனைக்கு அண்மையில் கையளிக்கப்பட்டது.

ஊவாவின் பின்தங்கிய ரிதிமாலியத்த பிரதேசத்தில் அதிகம் வசிக்கும் விவசாயிகள் பயிரிட்டு உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு உரிய விலையைப் பெற்றுகொடுக்கும் நன்னோக்குடனும், அவற்றினை விற்பனை செய்வதற்கு உரிய இடத்தை வழங்குவதற்காகவும் சகல வசதிகளையும் இந்த வர்த்தகவள நிலையம் வழங்கியுள்ளது.

இதன் போது அன்றைய தினம் மகாவலி அதிகார சபையின் ஒருங்கிணைப்புடன் 100 விவசாயக் குடும்பங்களுக்கு 40 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டதுடன், 100 கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான பொருளுதவியும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஊவா மாகாண உள்ளூராட்சி செயலாளர் காமினி மஹிந்தபால ஜோபியாஸ், மகாவலி அதிகார சபை அதிகாரிகள், உள்ளூராட்சி அரசியல் அதிகார சபை அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**எம்.ஏ.எம்.ஹசனார்**
**(ஊவா சுழற்சி நிருபர்)**




# 'மணிமகுடம் சூடும் நிலாமியாவின் நித்திலங்கள்' அட்டாளைச்சேனையில் நடைபெற்ற விழா

அட்டாளைச்சேனை கமு/அக்/நிலாமியா ஜுனியர் பாடசாலையில் 'மணிமகுடம் சூடும் நிலாமியாவின் நித்திலங்கள்' எனும் பெருவிழா அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு கௌரவம் வழங்கும் வகையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

2017 தொடக்கம் 2023ஆம் ஆண்டு வரை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 29 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய மூன்று மாணவர்களும் இந்த மாணவர்கள் சித்தியடைவதற்கு வழிப்படுத்திய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் ஞாபகார்த்தமாக 'நிலாமியாவின் நித்திலங்கள்' எனும் மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.எப்.எம். நழீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம். காசிம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.அஹமட் கியாஸ் கலந்து சிறப்பித்தனர். ஏனைய அதிதிகளாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் சட்டத்தரணி ஐ.முனாஸ், முன்னாள் செயலாளர் ஏ.சி.இமாதுத்தீன், நிலாமியா பௌண்டேஷன் தலைவர் ஏ.ஜி.முபாறக் ஆகியோர் பங்கேற்றனர். பிரமுகர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் அந்நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர்.




இந்நிகழ்வில் அதிபர் உரை நிகழ்த்தும் போது "இப்பாடசாலையில் தரம் ஐந்து வரை இருந்தாலும் இவர்கள் தான் எதிர்காலத் தலைவர்கள். எனவே இங்குள்ள பெற்றோர் மாணவர்களின் கல்விக்கு பங்களிப்பு செய்வது மிகவும் காத்திரமானது. எனவே பெற்றோர்களும் ஆசிரியர்களும் இணைந்து இன்று இடம்பெறும் சமூக சீர்கேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்" என்று கூறினார்.

மாணவ, மாணவிகளின் கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

**எம் எப் எம். நவாஸ்**
**(திராய்க்கேணி தினகரன் நிருபர்)**

# தென்கிழக்கு பல்கலைக்கழக சர்வதேச ஆய்வரங்கு நாளை

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இன்று 29 ஆம் திகதி இடம்பெறவிருந்த 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு, நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்கள் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் முன்னெடுக்கின்ற தொடர்ச்சியான இரு நாட்கள் கொண்ட அடையாள வேலைநிறுத்தத்தின் காரணமாக மறுதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆய்வரங்கின் இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவித்துள்ளார். அதன்படி இந்த ஆய்வரங்கு நாளை நடைபெறவுள்ளது.

நீண்ட நாட்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்ட குறித்த ஆய்வரங்கு திடீரென ஏற்பட்ட ஊழியர்களின் வேலைநிறுத்த போராட்டம் காரணமாக மறுதினத்துக்கு (2024.03.01 ) ஒத்திவைக்கப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இருந்தபோதும் ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் 2024.03.01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்றும், ஏற்பட்டுள்ள தடங்கலுக்கு வருந்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இடம்பெறவுள்ள 'Digital Transformation for a Sustainable Future' எனும் தொனிப்பொருளிலான குறித்த 12 ஆவது சர்வதேச ஆய்வரங்குக்கு பிரித்தானியாவின் Gloucestershire பல்கலைக்கழகத்தின் Head of School of Computing and Engineering பேராசிரியர் கமால் விச்கோம் பிரதான பேச்சாளராக கலந்து கொள்ளவுள்ளார். குறித்த மாநாட்டில் 200 ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.




**றிசாத் ஏ. காதர்**
**(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)**

# தி.மு.க காணாமல் போகும் என்று சொன்ன எத்தனையோ பேரை நான் பார்த்து விட்டேன்!

தி.மு.க காணாமல் போகும் என்று சொன்னவர்கள் எத்தனை பேரை நான் பார்த்திருக்கிறேன் என்று கனிமொழி எம்.பி கூறியுள்ளார்.

திமுக காணாமல் போகும் என்று சொன்னவர்கள் இப்போது இல்லை ஆனால் திமுக இருக்கிறது என்றும் கனிமொழி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் பிரதமர் நரேந்திர மோடி குலசேகரப்பட்டினத்தில் ரொக்கெட் ஏவுதளம் அமைக்க நேற்று அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில் கனிமொழி எம்.பி பங்கேற்றார்.

இது குறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார் கனிமொழி. அவர் தெரிவித்துள்ளதாவது:

"குலசேகரப்பட்டினத்தில் ரொக்கெட் ஏவுதளம் அமைத்திடும் தலைவர் கலைஞர் அவர்களின் கனவு நனவாகியுள்ளது. தொடர் கடிதங்கள், நாடாளுமன்றத்தில் கோரிக்கை, துறைசார் அமைச்சர்கள் அதிகாரிகள் சந்திப்பு என பத்து ஆண்டுகால நம் விடாமுயற்சியால் இன்று அடிக்கல் நாட்டப்படும் இத்திட்டம், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் உந்துசக்தியாக இருக்கும்.

பிரதமர் நரேந்திர மோடி, கடந்த 2 நாட்களாகவே தி.மு.க, காங்கிரஸ் கட்சியை கடுமையாக விமர்சித்து பேசினார். வாரிசு அரசியல், குடும்ப அரசியல், கொள்ளைக்கூட்டம், கபடதாரிகள் என்றெல்லாம் பேசினார்.



திருநெல்வேலியில் இன்று பேசிய மோடி, தமிழ்நாட்டில் இருந்தே தி.மு.க காணாமல் போகும் என்று கூறியுள்ளார். மூன்றாவது முறையாக தனது தலைமையிலான ஆட்சி அமைவது உறுதி என்றும் மோடி கூறியுள்ளார்.

மோடியின் பேச்சு குறித்து சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்கள் கேள்விக்கு

## மோடி மீது கனிமொழி தொடுத்த தாக்குதல்!

பதில் அளித்த கனிமொழி எம்.பி, "எத்தனை பேரை நான் பாத்திருக்கிறேன். தி.மு.க காணாமல் போகும் என்று சொன்னவர்கள்தான் இப்போது இல்லை" என்று தெரிவித்தார்.

மத்திய அரசின் திட்டங்களுக்கு மாநில அரசு பெயர் வைக்கவில்லை. யார் திட்டங்களுக்கு யார் ஸ்டிக்கர் ஒட்டுகிறார்கள் என்பது மக்களுக்கு தெரியும் என்றும் கனிமொழி கூறினார்.

# புலிபாய்ந்தகல் பகுதிக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

(ஓமந்தை விஷேட நிருபர்)




முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று விஜயமொன்றை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புலிபாய்ந்தகல் பகுதியில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

புலிபாய்ந்தகல் பகுதி மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்வதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதாக மீனவர்கள் கடற்றொழில் அமைச்சரிடம் முறையிட்டதையடுத்து அப்பகுதிக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். மீனவர்களிடம் சட்டவிரோத மீன்பிடி , காணி உரிமம் போன்ற பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இவ்விஜயத்தில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், கொக்குதொடுவாய் வடக்கு கிராம சேவையாளர் எம்.பிரபு, திணைக்கள அதிகாரிகள், அமைச்சின் உத்தியோகத்தர்கள், மற்றும் மீனவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கின் உதயம்

### அடிப்படை வசதிகளை ஏற்படுத்துமாறு

## கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பாடசாலை பெற்றோர் ஆர்ப்பாட்டம்

(பரந்தன் குறூப் நிருபர்)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரி பெற்றோர்கள் நேற்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடரீதியான ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட வசதியின்மை, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரி பெற்றோர்கள் நேற்று பாடசாலை நுழைவாயிலை மறித்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் கீழ் உள்ள மேற்படிப்பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 11 வரையான வகுப்புகளில் 246 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் அழகியல் மற்றும் கிறிஸ்தவம், புவியியல் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாமையால் மாணவர்களுடைய கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர்

அத்துடன் இப்பாடசாலை மாணவர்களுக்கான குடிநீர் வசதியின்மை மற்றும் மலசல கூட வசதியின்மை போன்றவற்றால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர். மாணவர்களுக்கு வகுப்பறையிலிருந்து கற்கக்கூடிய வகையில் தளபாடங்கள் இல்லாத காரணத்தால் மாணவர்கள் சிரமத்துக்குள்ளாகியுள்ளதாக பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.



யா/போக்கட்டி அ.த.க பாடசாலையின் கால்கோள் விழா நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (படம்; சாவகச்சேரி விசேட நிருபர்)







யாழ்.மாவட்ட பூப்பந்தாட்ட சங்கம், MSR'S EAST EAGLE SMASHERS(UK) குழுவின் அனுசரணையுடன் நடத்திய மாபெரும் பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் யாழ்.பல்கலைக்கழக உள்ளக அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட ஆயர்.கலாநிதி. ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராஜாவும் கலந்துகொண்டனர்.
(படங்கள்: யாழ்.விசேட நிருபர்)

## எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலும் கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த ஐவர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் போதனா வைத்தியசாலை தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

## யாழ்.மத்திய கல்லூரிக்கு தகுதியான அதிபர் ஒருவரை நியமிக்கும் கடமை எனக்குள்ளது

(யாழ்.விசேட நிருபர்)



யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபர் நியமன விவகாரத்தில் பழைய மாணவன் என்ற ரீதியில் கல்லூரிக்கு தகுதியான அதிபர் ஒருவரை தெரிவு செய்யும் பக்கமே நான் நிற்பேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடும் அச்சுறுத்தலிருந்த காலத்தில் யாழ்.மத்திய கல்லூரியை அமரர் இராசதுரை எவ்வாறு வழிநடத்தியவர் என பலருக்கு தெரியும்.

துரதிஷ்டவசமாக அவரது உயிர் பறிக்கப்பட்டுவிட்டது.

தற்போது யாழ். மத்திய கல்லூரிக்கு நிரந்தர அதிபரொருவரை நியமிப்பது தொடர்பில் அரசியல் தலையீடு இருப்பதாக கூறுகின்றீர்கள்

ஏதாவதொரு பிரச்சினை அரசியல் தலையீடு இல்லாமல் எங்காவது தீர்க்கப்படுகிறதா என நீங்கள் கூறுங்கள் பார்க்கலாம்.

மத்திய கல்லூரி அதிபர் விவகாரத்தில் அரசியல் செய்யவேண்டிய தேவை எனக்கில்லை .

ஆனால் பழைய மாணவன் என்ற ரீதியில் கல்லூரிக்கு தகுதியான அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டிய கடமை எனக்கு உள்ளது.

எனவே மத்திய கல்லூரி விடயத்தில் யார் கல்லூரியை முன்னோக்கி கொண்டு செல்வார் என கருதுகிறேனோ அவர் பக்கமே நான் நிற்பேன் என தெரிவித்த அமைச்சர் அரசியல் எனக் கூறுபவர்கள் கூறிவிட்டு செல்லட்டும் எனவும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் பல்கலைக்கழக முன்றலில் நேற்றைய தினம் புதன்கிழமை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரச பல்கலைக்கழகங்களில் நேற்றைய தினமும் இன்றைய தினமும் இரண்டு நாள் வேலைநிறுத்த போராட்டம் இடம்பெற்றுவருகின்ற நிலையில் அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



பரகஹதெனிய தாருத் தௌஹீத் அஸ் ஸலபியா கல்வி நிறுவனத்தின் மகளிர் பிரிவு மாணவிகள் கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டு லேக் ஹவுஸ் நிறுவனத்தை நேற்று பார்வையிட்ட பின்னர் எடுத்துக் கொண்ட படம். கல்வி நிறுவனத்தின் அதிபர் அஷ் ஷெய்க் எம்.சி. அன்ஸார் ரியாதி உள்ளிட்ட 10 ஆசிரிய, ஆசிரியர்களுடன் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்ட இம்மாணவிகள், பாராளுமன்றம், திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம் உட்பட நிறுவனங்கள் பலவற்றையும் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

(படப்பிடிப்பு ரஞ்ஜித் அசங்க)

## வெலிகம ஹப்ஸா அறபுக் கல்லூரியில் இரு பெரும் விழாக்கள்




(வெலிகம தினகரன் நிருபர்)

வெலிகம ஹப்ஸா மகளிர் அறபுக் கல்லூரியின் 9ஆவது அல் ஆலிமா பட்டமளிப்பு விழாவும் மற்றும் 2 ஆவது அல் ஹாபிழா பட்டமளிப்பு விழாவும் கடந்த வாரம் கல்லூரி வளாகத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றன.

ஹப்ஸா மகளிர் அறபுக் கல்லூரியின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஓ. பத்ஹுர் ரஹ்மான் ( பஹ்ஜி) தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவில், பிரதம பேச்சாளராக பரகஹதெனிய தாறுல் தௌஹீத் கலாபீட பணிப்பாளர் அஷ்ஷெய்க் என்.பி. அபூபக்கர் ஸித்தீக் (மதனி) கலந்து சிறப்பித்தார்.

2008ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இம் மகளிர் கல்லூரியில் 2015ம் ஆண்டு ஹிப்ளு பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, தற்போது இரண்டு பிரிவுகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்விழாவில் நாட்டின் பல்வேறு பிரதேசத்தைச் சேர்ந்த 23 ஆலிமாக்கள் சான்றிதழ் பெற்று வெளியேறியதோடு, 36 மாணவிகள் ஹாபிழாக்களாக சான்றிதழ் பெற்றுக் கொண்டனர்.

ஆலிமாக்களுக்கு சான்றிதழ்களுடன் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் மெசின்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன், ஹாபிழாக்களுக்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியான "பென்டன் " அன்பளிப்பாக வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் அன்றைய தினம் கண்காட்சியொன்றும் இடம் பெற்றது. இதில் மாணவிகளால் தயாரிக்கப்பட்ட விதம் விதமான பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

## தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டம்; அரசியல்வாதிகளுக்கு தெளிவூட்டல் அமர்வுகள்

### தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்பாடு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு தெளிவுபடுத்துவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கிணங்க, நேற்று முன்தினமும் எதிர்வரும் மார்ச் 06ஆம் திகதியும் அரசியல் கட்சியினருக்கு அதனை தெளிவுபடுத்தும் செயலமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்துக்கமைய தேர்தல்களுக்கான நிதியை செலவிடுவது மட்டுப்படுத்தப்படவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஒரு தேர்தலாவது நடத்தப்படாமை காரணத்தால் குறித்த சட்டத்தின் ஒழுங்குவிதிகள் தொடர்பில் அரசியல்வாதிகளுக்கு தெளிவுகளை ஏற்படுத்தும் நோக்கில் இந்த செயலமர்வுகள் நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்றுள்ள மேற்படி செயலமர்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, சிசிர ஜயகொடி, உவிது விஜேவீர உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.





அநுராதபுரம் மாவட்டத்தில் கிராமிய மக்களின் சுகாதார நிலையை விருத்தி செய்யும் நோக்கில் வைத்தியசாலை மற்றும் முதன்மை பராமரிப்பு மத்திய நிலையங்களின் வசதிகளை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் 1கோடி 39 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மதவாச்சி பூநேவ கல்கந்தேகம தாய் மற்றும் சேய் சுகாதார மத்திய நிலைய கட்டடத்தை வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் மக்களின் பாவனைக்காக திறந்து வைத்த போது பிடிக்கப்பட்ட படம்.

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# கிழக்கின் குரல்



## பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்துக்கு
# இலத்திரனியல் உபகரணங்கள், தளபாடங்கள் வழங்கி வைப்பு





கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட சந்திரகாந்தன் வித்தியாலய நிர்வாகம் மற்றும் கல்விச் சமூகம் விடுத்த கோரிக்கைக்கமைய இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஒன்றுகூடல் மண்டபத்துக்கான தளபாடங்களும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் ஆலோசனைக்கமைவாக விதுள் லங்கா நிறுவனத்தின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன..

பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலய அதிபர் க. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். தரம் மூன்று மாணவர்களின் கைவினைப் பொருட்கள் கண்காட்சியை பார்வையிட்டதுடன் மாணவச் செல்வங்களை பாராட்டி கௌரவித்தார். இந்நிகழ்வில் கல்குடா வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. ஜெயவதனன், கோட்டக்கல்வி பணிப்பாளர் ஜெயக்குமணன், பேத்தாளை விபுலானந்தா கல்லூரி அதிபர் முருகவேல், மிதுள் லங்கா நிறுவனத்தின் பொறியாளர்கள் நிமால் டிலால் பெனாண்டோ, ஜெய குணரத்ன, திட்டப் பணிப்பாளர்கள் ஷித்திக், ஷாபீர் உட்பட ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கிண்ணியா தள வைத்தியசாலைக்கான காணி சுகாதார பணிப்பாளரிடம் கையளிப்பு

## நீண்டகால போராட்டத்திற்கு கிடைத்த மகத்தான வெற்றி!

**(கிண்ணியா தினகரன், கிண்ணியா மத்திய நிருபர்கள்)**

கிண்ணியா பிரதேச செயலாளரினால் கிண்ணியா தள வைத்தியசாலைக்கான காணி பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் பிரேமநாந்திடம் கையளிக்கப்பட்டது.

கிண்ணியா தள வைத்தியசாலையின் அமைவிடம் சனநெருக்கடி நிறைந்த இடத்தில் அமைந்திருப்பதாலும் கிண்ணியா மக்களின் சனத்தொகைக்கேற்ப விசாலமான ஓர் இடமாக அமைந்திருப்பதாலும் மக்கள் நலனை கருத்திற்கொண்டு அதனை விஸ்தரிக்க திட்டமிடப்பட்டது. அதற்கமைய தற்போதைய அமைவிடத்தில் இடப்பற்றாக்குறை நிலவுவதால் கிண்ணியா தள வைத்தியசாலை பொருத்தமான இடத்தில் அமைய வேண்டுமென்ற கோரிக்கை பொதுமக்களாலும் சமூக நலன் விரும்பிகளாலும் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

மிக நீண்ட முன்னெடுப்புகளுக்குப் பின்னர் வைத்தியர் ஜிப்ரி மற்றும் அவரது குலாமினரின் அயராத உழைப்பில் கிண்ணியா தள வைத்தியசாலைக்கான பொருத்தமான இடம் இனம் காணப்பட்டு அக்காணி உத்தியோகபூர்வமாக நேற்று கையளிக்கப்பட்டது.



இந்நிகழ்வில் கிண்ணியா வைத்தியசாலை அபிவிருத்திக்குழு தலைவரும் வைத்தியருமான டொக்டர் ஜிப்ரி , கிண்ணியா பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் கால்தீனுடன் கிண்ணியா தள வைத்தியசாலை சிரேஷ்ட தாதி உத்தியோகத்தரும் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு செயலாளருமான எம். எம்.எம். நௌஷாத் ஆகியோருடன் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

கிண்ணியா மக்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு அயராது உழைத்தமைக்கு சிறந்த வெற்றி கிட்டியதாகவும் பல சவால்களுக்கு மத்தியிலேயே இவ்வெற்றியை அடைந்ததாகவும் தாதி உத்தியோகத்தரும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு செயலாளருமான எம்.எம்.எம். நௌஷாத் தெரிவித்தார்.

# கல்முனை வாய் சுகாதார பிரிவுக்கு மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

உலக வாய்ச் சுகாதார தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வாய் சுகாதார பிரிவிற்கு யுனிலிவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட ஒரு தொகை மருந்துப்பொருட்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா யுனிலிவர் நிறுவன அதிகாரிகள்,பணிமனை வைத்திய அதிகாரிகள் மற்றும் உத்தியோத்தர்கள் பங்கேற்றனர்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**

வன்னி ஹோப் அவுஸ்ரேலியா மற்றும் தாயகம் தமிழ் ஒலிபரப்புச்சேவை நிறுவனங்களினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. கல்குடா கல்வி வலயத்திலுள்ள சுமார் 250 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கதிரவெளி வம்மிவட்டுவான் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



அவுஸ்ரேலியாவில் இயங்கி வரும் பிரபல தமிழ் வானொலிச் சேவையான தாயகமும், வன்னி ஹோப் அவுஸ்ரேலியா தன்னார்வத் தொண்டு நிறுவனமும், இணைந்து கிழக்கு மாகாண வெள்ளப் பாதிப்பு அவசர நிதி சேகரிப்பு நிகழ்வொன்றை தாயகம் வானொலி ஊடாக மேற்கொண்டிருந்தது. அதன் மூலம் திரட்டிய நிதியைக் கொண்டு வெள்ளத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மூன்று கிராமங்களிலுள்ள தரம் ஒன்று தொடக்கம் 11 வரையான பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒரு வருடத்துக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், வன்னி ஹோப் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# இராணுவத்தினரால் தமிழ் பயிற்சி நெறி வகுப்புகள் ஆரம்பம்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட ஏழு பாடசாலை மாணவ மாணவிகளுக்கு ஆறு மாதகால தமிழ் பயிற்சி நெறி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த வகுப்பு சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் கந்தளாய் சிங்கள மத்திய மகாவித்தியாலத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் முன்னூறுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் மற்றும் மதகுருமார்களும் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர். இராணுவ கிழக்கு மாகாண கட்டளை அதிகாரிமேஜர் ஜெனரல் எம்.கே.யு.பி.குணரத்ன அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறுகின்றது.

# கட்டுத்துவக்குடன் ஒருவர் கைது

**(தோப்பூர் குறூப் நிருபர்)**

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெஹிவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் உள்ளூர் பிரதேசத்தில் தயாரிக்கப்பட்ட கட்டுத்துவக்கினை சட்டவிரோதமாக வைத்திருந்ததாக சேருநுவர பொலிஸாரால் கைது செய்யப்பட்டு (27) மூதூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இதனையடுத்து சந்தேகநபர் குற்றத்தை ஒத்துக்கொண்டதையடுத்து பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து நீதவான் தீர்ப்பளித்துள்ளார். குறித்த கட்டுத்துவக்கினை முறைப்படி அழிப்பதற்கும் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை அக். நிலாமியா ஜுனியர் பாடசாலையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும். ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம் எப் நழிம் தலைமையில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

(படம் பாலமுனை தினகரன் நிருபர்)

# அன்னமலை ஸ்ரீ சக்தியில் முப்பெருவிழா

**(காரைதீவு குறூப் நிருபர்)**

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தின் முப்பெரும் விழா அதிபர் பொன்.பாரதிதாசன் தலைமையில் நேற்று கோலாகலமாக நடைபெற்றது.

வகுப்பு 01 ன் வித்தியாரம்பம் புதுமுக புகுவிழா, வகுப்பு 5ன் விடுகை விழா, மற்றும் முன்பள்ளி மாணவர்களின் புதுமுக புகுவிழாவும் சேர்ந்து முப்பெருவிழாவாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாடசாலையில் ஆரம்ப கல்வியை கற்று, தற்போது ஆலையடிவேம்பு உதவி பிரதேச செயலாளராக பணியாற்றும் ரத்னம் சுபாகர் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, சமூக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தன. இவ்விழாவில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை அன்னமலையைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் தொழிலதிபர் எஸ்.காண்டீபன் (திரு திருமதி காண்டீபன் விவேணி தம்பதிகள் ) வழங்கி வைத்தனர்.



மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. புதிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# 'ஏ.ஆர்.எம். ஜிப்ரி ஒரு சகாப்தம்' நூல் அறிமுக நிகழ்வு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

'இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஆதரவில் மறைந்த ஒலி ஒளிபரப்பாளரும் கல்வியலாளருமான மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் நான்காவது வருட நினைவு தின நிகழ்வும், 'ஏ.ஆர்.எம். ஜிப்ரி ஒரு சகாப்தம்' எனும் நூல் அறிமுக நிகழ்வும் எதிர்வரும் மார்ச் 03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் மாளிகைக்காடு பாபா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவரும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருமான சிரேஷ்ட ஒலி ஒளிபரப்பாளர் யூ.எல். யாகூப் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், சர்வதேசப் புகழ் ஒலிபரப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் முன்னிலை வகிப்பதோடு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஆகியோர் முதன்மை அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், கல்முனை பணிமனையின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹிலா எஸ். இஸ்ஸடீன், கல்முனை பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி எம். றம்ஸீன் பக்கீர் ஆகியோர் இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொள்வர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் நிகழ்வில் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதோடு, இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.தாஜ் நூல் அறிமுக உரையையும் நிகழ்த்துகின்றனர்.

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் சிரேஷ்ட ஒலி ஒளிபரப்பாளர் மனிதநேயன் இர்ஷாத் ஏ. காதர் நிகழ்ச்சி நெறியாள்கையையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபன பிறை எப்.எம். அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம். நௌபீல் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பையும் செய்துள்ளனர்.

## அபிவிருத்தி, சமூக உறவை கட்டியெழுப்புவதற்கு
# சகலரும் முன்வர வேண்டும்!

**(ஒலுவில் விசேட நிருபா்)**

நாட்டின் நிலையான அபிவிருத்திக்கும் சமூக உறவை கட்டியெழுப்புவதற்கும் சகலரும் முன்வர வேண்டுமென பொத்துவில் உதவி பிரதேச செயலாளர் எம்.ராமக்குட்டி தெரிவித்தார்.

இனம் மற்றும் மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக பொத்துவில் எலிபண்ட் சக வாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வமத தலைவர்கள் மற்றும் சமூக சேவை செயற்பாட்டாளர்களை பாராட்டி கௌரவிக்கும் வைபவம் நேற்று புதன்கிழமை (28) பொத்துவில் பிரதேச செயலக மண்டபத்தில் தலைவர் எம்.எச்.அன்வர் தலைமையில் நடைபெற்றது, இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உதவி பிரதேச செயலாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒரு மதத்தினுடைய கலாசாரத்தை ஏனைய மதம் புரிந்து செயற்படுமாயின் கடந்த காலங்களில் ஏற்பட்ட இனப்பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

எதிர்காலத்தில் பிரச்சினைகளை பேசித் தீர்க்க கூடிய ஒரு நிலையான திட்ட வரைபினை சர்வமத குழுவினர் ஏற்படுத்த வேண்டும். அதனூடாகத்தான் நிரந்தரமான சமாதானத்தை கட்டியெழுப்ப முடியும்.

சகல சமூகங்களும் சமாதானத்தையும், சகோதரத்துவத்தையுமே விரும்புகின்றன. ஒவ்வொரு சமூகத்தவர்களும் பரஸ்பர புரிந்துனர்வுடன் செயற்பட வேண்டும். அப்போது தான் நாம் எதிர்பார்த்திருக்கின்ற நிலையான சமாதானத்தை அடைய முடியும்.

இதனால் தேசம் முழுதும் சமூகங்களின் மத உரிமையையும், நல்வாழ்வையும் பாதுகாப்பதற்கான உள்ளூர் பொறிமுறைபற்றிய உள்ளூர் வளங்களைக் கொண்டு புதிய அறிவு உற்பத்தி செய்யப்படும்.

நாட்டின் அபிவிருத்திக்கும், இன உறவை வளர்ப்பதற்காகவும் அரசாங்கத்தினால் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு இதற்கென அமைச்சும் ஏற்படுத்தப்பட்டு கூடுதலான நிதியினையும் ஒதுக்கீடு செய்துள்ளது.

மத ஒற்றுமையையும் சமய சக வழ்வையும் நம் தேசத்தில் கட்டியெழுப்புவதற்கு மூன்று இனங்களும் ஒற்றுமையாக வாழும் முன்மாதிரிப் பூமியாகிய அம்பாறை மாவட்ட மக்கள் பங்காளியாக அமைவார்கள் என நம்புகிறேன், என்றார்.



உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய வாய் சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த மாபெரும் பற் சிகிச்சை முகாம் பெரியநீலாவனை கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை வளாகத்தில் பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.சரூக் தலைமையில் நடைபெற்றது. பற் சிகிச்சை மருத்துவ முகாமில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். (படம்: சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)

Cargills Bank
வாழ்க்கைக்கு உயிரூட்டும் வங்கி

# கார்கில்ஸ் வங்கி பிஎல்சி
# 31 டிசம்பர் 2023 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலைகள் அறிக்கைகள்

## வருமானக் கூற்று

| | ஆறு மாதங்கள் முடிந்தது | | | காலாண்டு முடிந்தது | | |
|---|---|---|---|---|---|---|
| | 31-12-2023 | 31-12-2022 (கணக்காய்வு செய்த) | மாற்றம் | 31-12-2023 | 31-12-2022 | மாற்றம் |
| | ரூ. '000 | ரூ. '000 | % | ரூ. '000 | ரூ. '000 | % |
| வட்டி வருமானம் | 10,929,051 | 8,002,096 | 37 | 2,487,897 | 2,373,755 | 5 |
| கழி: வட்டிச் செலவினங்கள் | (7,547,659) | (4,797,845) | (57) | (1,707,620) | (1,596,271) | (7) |
| **தேறிய வட்டி வருமானம்** | 3,381,392 | 3,204,251 | 6 | 780,277 | 777,484 | 0 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 1,283,431 | 1,272,446 | 1 | 342,267 | 343,017 | (0) |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | (484,664) | (410,078) | (18) | (133,627) | (121,351) | (10) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 798,767 | 862,368 | (7) | 208,640 | 221,666 | (6) |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | 324 | 994 | (67) | (28) | 46,617 | (100) |
| இலாபம் மற்றும் நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் நிதிக் கருவிகளில் இருந்து நிகர இலாபம/(நட்டம்) | 264,942 | - | - | 86,225 | - | - |
| நிதியியல் முதலீடு மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | 176,953 | 20,814 | 750 | 9,588 | 7,549 | 27 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் – தேறிய * | 252,716 | 192,260 | 31 | 28,955 | 24,557 | 18 |
| **மொத்த ஏனைய வருமானம்** | 694,935 | 214,068 | 225 | 124,740 | 78,723 | 58 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | 4,875,094 | 4,280,687 | 14 | 1,113,657 | 1,077,873 | 3 |
| **மொத்தக் கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு** | (848,792) | (1,463,486) | 42 | (241,656) | (247,528) | 2 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | 4,026,302 | 2,817,202 | 43 | 872,001 | 830,345 | 5 |
| பணியாளர் செலவுகள் | (1,072,799) | (915,285) | (17) | (285,501) | (230,412) | (24) |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | (331,904) | (437,014) | 24 | (87,561) | (171,092) | 49 |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (1,486,894) | (1,002,185) | (48) | (415,816) | (233,987) | (78) |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | (2,891,597) | (2,354,484) | (23) | (788,878) | (635,491) | (24) |
| **நிதிச் சேவைகள் மூலமான வரிக்கு முந்திய செயற்படு இலாபம்/(நட்டம்)** | 1,134,705 | 462,718 | 145 | 83,121 | 194,854 | (57) |
| நிதிச் சேவைகள் மீதான வரி | (404,828) | (256,281) | (58) | (77,856) | (89,201) | 13 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | 729,877 | 206,437 | 254 | 5,267 | 105,653 | (95) |
| கழி: வரிச் செலவினங்கள் | (289,857) | 281,327 | (203) | 2,969 | 286,676 | (99) |
| **வருடத்திகான இலாம்** | 440,020 | 487,764 | (10) | 8,236 | 392,329 | (98) |
| ஒரு பங்கின் அடிப்படை வருவாய் (ரூ.) | 0.50 | 0.55 | (10) | 0.01 | 0.44 | (98) |

## பங்கு மாற்றங்களின் கூற்று

| | உரிமை மூலதனம் | நியதிச் சட்ட இருப்புக்கள் | பிற விரிவான வருமான இருப்பு மூலம் நியாயமான பெறுமதி | திரட்டப்பட்ட இழப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 2022.01.01 திகதியன்று மீதி – கணக்காய்வு செய்யப்பட்டது | 11,394,421 | 32,386 | (46,132) | (2,055,814) | 9,324,862 |
| **31.12.2022 உடன் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான மொத்த விரிவான வருமானம்** | | | | | |
| காலப்பகுதிக்கான நட்டம் | - | - | - | 487,764 | 487,764 |
| ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி | - | - | (86,619) | (5,701) | (92,320) |
| **காலப்பகுதிக்கான மொத்த விபரமான வருமானம்** | - | - | (86,619) | 482,063 | 395,444 |
| **வங்கி உரிமையாளர்களுடனான பரிவர்த்தனைகள் பங்களிப்புகள் மற்றும் விநியோகங்கள்** | | | | | |
| பங்கு விநியோகம் | - | - | - | - | - |
| சட்டரீதியான இருப்புகளுக்கு மாற்றம் | - | 24,388 | - | (24,388) | - |
| **காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்** | - | 24,388 | - | (24,388) | - |
| **01.01.2023 திகதியன்று மீதி - கணக்காய்வு செய்யப்பட்டது** | 11,394,421 | 56,774 | (132,751) | (1,598,139) | 9,720,305 |
| **31.12.2023 வரையான மொத்த விரிவான வருமானம்** | | | | | |
| காலப்பகுதிக்கான இலாபம் | - | - | - | 440,020 | 440,020 |
| ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி | - | - | 1,279,306 | 3,152 | 1,282,458 |
| **காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்/(நட்டம்)** | - | - | 1,279,306 | 443,172 | 1,722,478 |
| **வங்கி உரிமையாளர்களுடனான பரிவர்த்தனைகள் பங்களிப்புகள் மற்றும் விநியோகங்கள்** | | | | | |
| பங்கு விநியோகம் | 500,000 | - | - | - | 500,000 |
| சட்டரீதியான இருப்புகளுக்கு மாற்றம் | - | 22,001 | . | (22,001) | - |
| **காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்** | 500,000 | 22,001 | - | (22,001) | 500,000 |
| **31.12.2023 திகதியன்று மீதி** | 11,894,421 | 78,775 | 1,146,555 | (1,176,968) | 11,942,783 |

## ஏனைய விரிவான வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டக் கூற்று

| | ஆறு மாதங்கள் முடிந்தது | | | காலாண்டு முடிந்தது | | |
|---|---|---|---|---|---|---|
| | 31-12-2023 | 31-12-2022 (கணக்காய்வு செய்த) | மாற்றம் | 31-12-2023 | 31-12-2022 | மாற்றம் |
| | ரூ. '000 | ரூ. '000 | % | ரூ. '000 | ரூ. '000 | % |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | 440,020 | 487,764 | (10) | 8,236 | 392,330 | (98) |
| **வரி நீங்கலான ஏனைய முற்றுமடங்கலான வருமானம்** | | | | | | |
| **இலாப நட்டம் என மறுவகைப்படுத்தப்படாத உருப்படிகள்** | | | | | | |
| வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களில் தேறிய காப்பீட்டு வருமானம் | 4,503 | (5,701) | 179 | 4,503 | (5,701) | 179 |
| உரிமை முதல் கருவிகளில் நியாயமான பெறுமதி | (1,351) | | - | (1,351) | | - |
| மேலே தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வரி | 2,672 | 1,575 | - | 2,672 | 1,575 | 70 |
| உரிமை முதல் கருவிகளில் நியாயமான பெறுமதி | (802) | (283) | - | (802) | (283) | (183) |
| | 5,022 | (4,409) | 214 | 5,022 | (4,409) | 214 |
| **ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயப் பெறுமதியில் நிதிக் கருவிகள்** | | | | | | |
| **காலப்பகுதிக்கான நியாயப் பெறுமதி இலாபம் /(நட்டம்)** | | | | | | |
| திறைசேரி உண்டியல்கள் | 114,055 | (45,964) | 348 | (38,927) | 49,342 | (179) |
| திறைசேரி பத்திரங்கள் | 1,881,928 | (58,223) | 3,332 | 50,655 | 23,215 | 118 |
| | 1,995,983 | (104,187) | 2,016 | 11,728 | 72,557 | (84) |
| **அகற்றப்படுகையில் வருமான அறிக்கையில் உணரப்பட்ட நியாயப் பெறுமதி (இலாபம்)/நட்டங்கள்** | | | | | | |
| திறைசேரி உண்டியல்கள் | (10,150) | (20,814) | 51 | (2,870) | (7,549) | 62 |
| திறைசேரி பத்திரங்கள் | (166,803) | - | - | (6,718) | - | - |
| | (176,953) | (20,814) | (750) | (9,588) | (7,549) | (27) |
| **FVOCI இல் நிதிக் கருவிகளை மீள் அளவிடுகையில் நிகர இலாபம் / (நட்டம்)** | | | | | | |
| திறைசேரி உண்டியல்கள் | 103,905 | (66,778) | 256 | (41,797) | 41,793 | (200) |
| திறைசேரி பத்திரங்கள் | 1,715,125 | (58,223) | 3,046 | 43,937 | 23,215 | 89 |
| | 1,819,030 | (125,001) | 1,555 | 2,140 | 65,008 | (97) |
| **மேலே உள்ளவற்றுடன் தொடர்புடைய ஒத்திவைக்கப்பட்ட வரி** | (541,594) | 37,090 | (1,560) | 3,473 | (19,717) | 118 |
| | 1,277,436 | (87,911) | 1,553 | 5,613 | 45,291 | (88) |
| **காலப்பகுதிக்கான வரி நீங்கலாக ஏனைய விரிவான வருமானம்** | 1,282,458 | (92,320) | 1,489 | 10,635 | 40,882 | (74) |
| **காலப்பகுதிக்கான வரி நீங்கலாக மொத்த ஏனைய விரிவான வருமானம்/(செலவினம்)** | 1,722,478 | 395,444 | 336 | 18,871 | 433,212 | (96) |

## நிதி நிலைமைக் கூற்று

| திகதிக்கு | 31-12-2023 | 31-12-2022 (கணக்காய்வுக்கு உட்பட்டது) | மாற்றம் |
|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | % |
| **சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 1,963,322 | 1,232,272 | 59 |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | 432,805 | 1,311,926 | (67) |
| வங்கிகளுடனான நடவடிக்கைகள் | 730,566 | - | - |
| நிதி உபகரணங்களிலிருந்து பெறப்பட்டவை | 6 | - | - |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் நிதிச் சொத்துகள் | 2,468,401 | - | - |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் சொத்துகள் – ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 40,559,439 | 35,960,080 | 13 |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் சொத்துகள் – கடன் மற்றும் ஏனைய கடன் பத்திரங்கள் | 2,050,118 | 1,996,950 | 3 |
| ஏனைய தொகுக்கப்பட்ட வருமானம் ஊடாக நியாய மதிப்பீட்டில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துகள் | 17,779,519 | 10,253,496 | 73 |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 462,705 | 475,180 | (3) |
| அருவச் சொத்துக்கள் | 283,445 | 335,150 | (15) |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 290,259 | 955,721 | (70) |
| ஏனைய சொத்துக்கள் | 2,721,879 | 1,232,034 | 121 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 69,742,464 | 53,752,809 | 30 |
| **பொறுப்புக்கள் மற்றும் பங்கு மூலதனம்** | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | 717,667 | 514,193 | 40 |
| நிதி உபகரணங்களிலிருந்து பெறப்பட்டவை | 27 | 30 | (10) |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் பொறுப்புக்கள் – வைப்புக்களின் காரணமாக | 50,728,852 | 37,802,680 | 34 |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் பொறுப்புக்கள் – ஏனைய கடன் பத்திர உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 3,669,925 | 3,688,924 | (1) |
| ஓய்வூதிய நலப் பொறுப்புக்கள் | 108,605 | 96,806 | 12 |
| குத்தகைப் பொறுப்பு | 335,781 | 340,542 | (1) |
| ஏனைய பொறுப்புக்கள் | 2,238,824 | 1,589,329 | 41 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 57,799,681 | 44,032,504 | 31 |
| **பங்கு மூலதனம்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 11,894,421 | 11,394,421 | 4 |
| பிற பங்கு செயற்கருவி | 78,775 | 56,774 | 39 |
| நியதிச் சட்ட ஒதுக்கம் | 1,146,555 | (132,751) | 964 |
| ஏனைய விரிவான வருமான இருப்பு மூலம் நியாயப் பெறுமதி | (1,176,968) | (1,598,139) | 26 |
| திரண்ட நட்டம் | 11,942,783 | 9,720,305 | 23 |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்கு மூலதனம்** | 69,742,465 | 53,752,809 | 30 |
| **சார்ந்த பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்** | 16,697,057 | 22,292,738 | |
| **சாதாரண பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் மதிப்பு (ரூ.)** | 12.63 | 11.01 | |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 623 | 598 | |
| கிளைகளின் எண்ணிக்கை | 24 | 23 | |

**உறுதிப்படுத்தல்கள்:**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்க இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஒப்பம்)
**டீ.கஜநாயக்க**
தலைவர் – நிதி

கீழே கையொப்பமிட்டவர்களான நாம், வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கியின் நிர்வாகப் பணிப்பாளர்களாகவும், தலைவராகவும், கூட்டாக சான்று பகர்கிறோம்.
(அ) மேற்கண்ட அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவம் மற்றும் வரையறைகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும்,
(ஆ) இந்த அறிக்கைகளில் உள்ள தகவல்கள், கணக்காய்வு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படா விட்டால், வங்கியின் கணக்காய்வு செய்யப்படாத நிதி அறிக்கைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும்.

| | |
|---|---|
| (ஒப்பம்) | (ஒப்பம்) |
| **கே பி எஸ் பண்டார** | **ஆர் ஏ இபெல்** |
| முகாமைத்துவப் பணிப்பாளர் | தலைவர் |

28/02/2024
கொழும்பு

## காசுப்பாய்ச்சல் கூற்று

| | முடிவடைந்த மூன்று மாதங்களுக்கு | |
|---|---|---|
| | 31-12-2023 | 31-12-2022 (கணக்காய்வு செய்த) |
| | ரூ. '000 | ரூ. '000 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| வரிக்கு முந்திய இலாபம் | 729,877 | 206,437 |
| ***சீராக்கங்கள்:*** | | |
| வரிக்கு முந்திய இலாபம் உள்ளடக்கப்பட்ட காசு அல்லாதவைகள் | 1,611,809 | 2,775,724 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் மற்றும் இதர சொத்துக்கள் விற்பனையின் இலாபங்கள்/(நட்டங்கள்) | (44,442) | (34,271) |
| பங்கிலாப வருமானம் | (99) | (315) |
| பங்குலாப வருமானம் | (1,571) | (720) |
| ஈவுத்தொகை வருமானம் | (18,599) | (12,674) |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் விற்பனையில் ஆதாயங்கள்/(இழப்புகள்) | (14,647,705) | (324,582) |
| குறிப்பிட்ட நன்மை வழங்கல் திட்டத்தின் கீழ் செலுத்தியவை | 13,896,763 | (2,118,078) |
| **செயற்படு நடவடிக்கைகளில் இருந்து/ (பயன்படுத்தப்படும்) நிகர நிதி** | 1,526,033 | 491,521 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய கொள்வனவு | (97,096) | (177,616) |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனையின் மூலம் இலாபங்கள் | 336 | 755 |
| கடன் பத்திரங்களில் முதலீடு | - | (160,353) |
| அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | (79,675) | (193,576) |
| பெற்ற பங்குலாபம் | 1,571 | 720 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்திய) காசுப்பாய்ச்சல்** | (174,864) | (530,070) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| செலுத்திய குத்தகைப் பொறுப்பு | | |
| மீள்கொள்முதல் அடிப்படையில் விற்பனை செய்யப்படும் பத்திரங்களின் மாற்றம் | (95,951) | (91,513) |
| செலுத்திய வட்டி | (18,999) | (280,693) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்திய) தேறிய காசு** | (469,650) | (152,517) |
| | (584,600) | (524,722) |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | 766,569 | (563,270) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 1,260,340 | 1,823,610 |
| **காலமுடிவின் போது காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | 2,026,909 | 1,260,340 |
| குறைவு: குறைபாடு | (63,587) | (28,068) |
| **நிதி நிலை அறிக்கையின்படி ரொக்கம் மற்றும் பணத்திற்குச் சமமானவை (நிகரம்)** | 1,963,322 | 1,232,272 |

## மேலதிக வெளிப்படுத்துகைகள்

| திகதியில் உள்ளவாறு | 31 டிசம்பர் 2023 | 31 டிசம்பர் 2022 (கணக்காய்வு செய்த) |
|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 |
| **மொத்தக் கடன்களும் முற்பணங்களும்** | | |
| **மொத்தக் கடன்களும் முற்பணங்களும** | 45,553,094 | 40,249,717 |
| **கழி: கட்டம் வாரியாக வலுக்குறைவு** | | |
| கட்டம் 1 | 188,024 | 132,422 |
| கட்டம் 2 | 709,734 | 1,026,985 |
| கட்டம் 3 | 4,095,897 | 3,130,230 |
| **கடன்கள் மற்றும் முன்கூட்டியே மொத்த குறைபாடு** | 4,993,655 | 4,289,637 |
| **மொத்த நிகர கடன்கள் மற்றும் முற்பணங்கள்** | 40,559,439 | 35,960,080 |
| **ஏனைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் வருமதிகள்** | | |
| **உற்பத்தியின் படி - உள்நாட்டுப் பணம்** | | |
| வங்கி மேலதிகப் பற்று | 6,182,468 | 5,848,747 |
| வர்த்தக நிதி | 2,516,096 | 2,040,049 |
| வீட்டுக் கடன்கள் | 996,578 | 1,183,963 |
| தனிப்பட்ட கடன்கள் | 2,805,144 | 3,507,052 |
| தவணைக் கடன்கள் | 305,365 | 263,202 |
| விவசாயக் கடன்கள் | 16,033,013 | 14,941,418 |
| வாகனக் கடன்கள் | 1,519,567 | 1,725,097 |
| சொத்துக்களுக்கு எதிரான கடன்கள் | 592,400 | 456,584 |
| சுழற்சிக் கடன்கள் | 8,203,896 | 4,405,443 |
| நிதிச்சந்தைக் கடன்கள் | 96,927 | 71,476 |
| பெறத்தக்க உண்டியல்கள் | 1,640,656 | 1,554,323 |
| கடன் அட்டை | 41,896 | 49,095 |
| நுண் நிதி | 416,862 | 297,988 |
| **உப தொகை** | 41,350,868 | 36,344,437 |
| **உற்பத்தியின் படி - வெளிநாட்டு நிதி** | | |
| மேலதிகப் பற்று | 1,603,524 | 904,923 |
| வர்த்தக நிதி | 70,969 | 98,333 |
| தவணைக் கடன்கள் | 2,437,641 | 2,847,598 |
| மேலதிகப் பற்றுக்கள் | 8,970 | 8,970 |
| ஏனையவை | 81,122 | 45,456 |
| **உப மொத்தம்** | 4,202,226 | 3,905,280 |
| **மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்** | 45,553,094 | 40,249,717 |

**காலப்பகுதிக்கான அசைவுகள் - ஏனைய வாடிக்கையாளர்களின் கடன்கள் மற்றும் வருமதிகளின் திரண்ட பெறுமதி குறைப்புக்களின் - 2023**

| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 ஜனவரி 2023 இன் ஆரம்ப இருப்பு – கணக்காய்வு செய்யப்பட்டது | 132,422 | 1,026,985 | 3,130,230 | 4,289,637 |
| வருமான அறிக்கைக்கான கட்டணம் / (மீள் எழுதுதல்) | 95,541 | (313,236) | 1,039,592 | 821,897 |
| அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகளில் மாற்று விகித வேறுபாடு | (39,939) | (4,015) | (73,925) | (117,879) |
| **31 டிசம்பர் 2023 இன் இறுதி இருப்பு** | 188,024 | 709,734 | 4,095,897 | 4,993,655 |

**காலப்பகுதிக்கான அசைவுகள் - ஏனைய வாடிக்கையாளர்களின் கடன்கள் மற்றும் வருமதிகளின் திரண்ட பெறுமதி குறைப்புக்களின் - 2022**

| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 ஜனவரி 2022 இன் ஆரம்ப இருப்பு – கணக்காய்வு செய்யப்பட்டது | 152,309 | 617,283 | 2,421,903 | 3,191,495 |
| வருமான அறிக்கைக்கான கட்டணம் / (மீள் எழுதுதல்) | (77,730) | 357,527 | 155,150 | 434,947 |
| அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகளில் மாற்று விகித வேறுபாடு | 57,843 | 52,175 | 553,177 | 663,195 |
| **31 டிசம்பர் 2022 இன் இறுதி இருப்பு - கணக்காய்வு செய்யப்பட்டது** | 132,422 | 1,026,985 | 3,130,230 | 4,289,637 |

| திகதியில் உள்ளவாறு | 31 டிசம்பர் 2023 | 31 டிசம்பர் 2022 (கணக்காய்வு செய்த) |
|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 |
| **மொத்தக் கடன்களும் முற்பணங்களும** | 16,772,021 | 22,406,911 |
| **கழி: கட்டம் வாரியாக வலுக்குறைவு** | | |
| கட்டம் 1 | 48,239 | 46,252 |
| கட்டம் 2 | 10,872 | 43,284 |
| கட்டம் 3 | 15,853 | 24,637 |
| **கடன்கள் மற்றும் முன்கூட்டியே மொத்த குறைபாடு** | 74,964 | 114,174 |
| **மொத்த நிகர கடன்கள் மற்றும் முற்பணங்கள்** | 16,697,057 | 22,292,737 |
| **தயாரிப்பு வாரியாக கடமைகள் மற்றும் எதிர்பாராத செலவினங்கள்** | | |
| **உற்பத்தியின் படி - உள்நாட்டு நிதி** | | |
| உத்தரவாதங்கள் | 5,923,610 | 7,372,782 |
| கடன் கடிதங்கள் | 346,271 | 520,821 |
| கட்டண சேகரிப்புகள் | - | 1,236,904 |
| வரையப்படாத கடன் சேவைகள் | 8,626,315 | 11,643,163 |
| ஏனைய கடப்பாடுகள் | 89,878 | 273,659 |
| **உப தொகை** | 14,986,074 | 21,047,330 |
| **உற்பத்தியின் படி - வெளிநாட்டு நிதி** | | |
| உத்தரவாதங்கள் | 498,810 | 343,707 |
| கடன் கடிதங்கள் | 1,199,251 | 20,860 |
| சேகரிப்பதற்காக உள்ள பற்றுப் பத்திரங்கள் | 87,886 | 33,563 |
| நிதி நிறுவன முன்னோக்கு கொள்முதல் | - | 961,452 |
| **உப தொகை** | 1,785,947 | 1,359,581 |
| **மொத்தக் கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராத செலவினங்கள்** | 16,772,021 | 22,406,911 |

**காலப்பகுதிக்கான கடப்பாடுகள் மற்றும் எதிர்பாரா செலவினங்களுக்கான குறைப்புக்கனின் அசைவுகள்**

| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 ஜனவரி 2023 இன் ஆரம்ப இருப்பு – கணக்காய்வு செய்யப்பட்டது | 46,252 | 43,284 | 24,637 | 114,173 |
| வருமான அறிக்கைக்கான கட்டணம் / (மீள் எழுதுதல்) | 1,986 | (32,412) | (8,784) | (39,210) |
| **31 டிசம்பர் 2023 திகதியில் உள்ளவாறு இறுதி இருப்பு** | 48,238 | 10,872 | 15,853 | 74,963 |

| திகதியில் உள்ளவாறு | 31 டிசம்பர் 2023 | 31 டிசம்பர் 2022 (கணக்காய்வு செய்த) |
|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 |
| **ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை** | | |
| **உற்பத்தியின் படி - உள்நாட்டு நிதி** | | |
| நடைமுறைக் கணக்கு வைப்புக்கள் | 2,730,719 | 1,688,146 |
| சேமிப்பு வைப்புக்கள் | 8,460,596 | 5,122,446 |
| அழைப்பு வைப்புக்கள் | 1,336 | 83,373 |
| கால வைப்புக்கள் | 35,507,813 | 27,518,903 |
